வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 20.09.2023 புதன்கிழமை | இதழ் : 284 | பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

# இந்தியாவுடனோ சீனாவுடனோ இலங்கை கூட்டணி அமைக்காது



## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

நியூயோர்க், செப்ரெம்பர் 20

**இலங்கை அரசாங்கம் இந்தியாவுடனோ அல்லது சீனாவுடனோ கூட்டணி அமைக்காது. எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கையின் நலன்களை முன்னிலைப்படுத்தி நிற்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

இந்து - பசுபிக் பிராந்தியத்தில் பெரும் வல்லரசு போட்டி நிலவிய போதிலும் இந்து சமுத்திரம் மற்றும் தென் பசுபிக் சமுத்திரதீவு நாடுகளின் சுதந்திரம் அவற்றின் உள்ளக விவகாரங்களில் தலையிடாமை மற்றும் அவர்களின் தனிப்பட்ட உரிமைகளை பாதுகாப்பதற்காக 11

## 75 துப்பாக்கி சூடுகள்: 42 பேர் உயிரிழப்பு 33 பேருக்கு காயம்!

கொழும்பு, செப். 20

நாடு முழுவதும் இந்த வருடம் ஆரம்பம் முதல் திங்கட்கிழமை வரையான காலப்பகுதி வரை 75 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதன்போது 42 பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

துப்பாக்கிப் பிரயோக சம்பவங்களில் காயமடைந்த 33 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. 11

## கொழும்பில் திலீபன் நினைவேந்தல் நடத்துவதற்கு நீதிமன்றங்கள் தடை!

கொழும்பு, செப். 20

கொழும்பின் மருதானை, கோட்டை பகுதிகள் உட்பட மேலும் சில பகுதிகளில் தியாக தீபம் திலீபனை நினைவுகூரும் நிகழ்வுகளை நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை உத்தரவை கோட்டை, மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றங்கள் விதித்துள்ளன. கோட்டை மற்றும் மருதானை பொலிஸார் நீதிமன்றில் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

"ஒடுக்கப்படும் தமிழ் மக்களோடு நிற்போம்" என்ற கோஷத்துடன் கிறிஸ்தவ ஒத்துழைப்பு இயக்கத்தால் நேற்று செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணிக்கு மருதானையில் அமைந்துள்ள சமய, சமூக நடுநிலையத்தில் திலீபன் நினைவேந்தல் நிகழ்வு 11

## நான்கு பேர் கொண்ட குடும்பத்தின் அடிப்படைதேவைக்கு ரூ. 64,000!

கொழும்பு, செப். 20

நான்கு பேர் கொண்ட குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு குறைந்தது மாதாந்தம் 63 ஆயிரத்து 912 ரூபாய் செலவாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஜூலை மாதத்துக்கான மாதாந்திர வறுமைக் கோட்டு அட்டவணையை மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ளது. இதிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு நபர் தனது குறைந்தபட்ச அடிப்படை தேவைகளை ஒரு மாதத்தில் பூர்த்தி செய்ய ரூ. 15 ஆயிரத்து 978 தேவை. கொழும்பு மாவட்டத்தில் 11

## 25ஆம் திகதி முதல் யாழில் நுளம்பு கட்டுப்பாட்டு வாரம்!

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்



யாழ்ப்பாணம், செப். 20

எதிர்வரும் 25ஆம் திகதி முதல் இரண்டு வாரங்களை நுளம்பு கட்டுப்பாட்டு வாரமாக பிரடனப்படுத்தியுள்ளதாக யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் 11

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

## பாராளுமன்றத்தில் நாளை முதல் விவாதம்!

கொழும்பு, செப். 20

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நாளை வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் விவாதத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு இணையாக தாக்குதல் குறித்த விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பில் பாதுகாப்புப் பிரிவினர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 11



## தியாகி திலீபன் நினைவூர்தி முல்லைத்தீவை அடைந்தது!

முல்லைத்தீவு, செப்.20

பொத்துவிலில் இருந்து நல்லூர் நோக்கி ஆரம்பமான தியாகி திலீபனின் நினைவூர்தி நேற்று முல்லைத்தீவை சென்றடைந்தது.

தியாக தீபம் திலீபனின் 36 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் "திலீபன் வழியில் வருகின்றோம்" ஊர்தி 11

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

## சஹ்ரானுக்கு ஐ. எஸ். அமைப்பினரின் உதவி கிடைத்ததற்கு ஆதாரம் இல்லை!

### சி. ஐ. டி.யின் முன்னாள் பொறுப்பதிகாரி

கொழும்பு, செப்.20

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னரும் பின்னரும் புலனாய்வு பிரிவினர் செயல்பட்டவிதம் சந்தேகத்துக்கு இடமானதாக இருந்தது. ஐ. எஸ். அமைப்பிடமிருந்து சஹ்ரானுக்கு உதவிகள் கிடைத்தன என்பதற்கான ஆதாரங்கள் எதுவுமில்லை என்று அந்த சமயம் குற்றப் புலனாய்வு பிரிவுக்கு பொறுப்பாக இருந்த சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

புலனாய்வு அமைப்புகள் மற்றும் புலனாய்வு முகவர்களின் நடவடிக்கைகள் குறித்து பல கேள்விகள் உள்ளன. உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு தலைமை வகித்த சஹ்ரான் ஹாசிமை கட்டுப்படுத்திய மற்றுமொரு நபர் காணப்பட்டார். அந்த நபர் மிகவும் புத்திசாலி - இலங்கையில் முதலாவது ஒருங்கிணைக்கப்பட்ட 11

## படகு கவிழ்ந்து விபத்து இளைஞர் ஒருவர் மரணம்!

திருகோணமலை, செப். 20

குச்சவெளி பிரதேசத்தில் செந்தூர் பகுதியில் படகு கவிழ்ந்ததில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

மீன் பிடிப்பதற்காக செந்தூர் மதுரங்குடா கலப்பு பகுதிக்கு இரு இளைஞர்கள் சென்றுள்ளனர். அப்போது படகு கவிழ்ந்ததில் இளைஞர் 11

## இப்படியும் நடக்கிறது

கடந்த ஆண்டு இந்தக் காலப்பகுதியில் திலீபனின் நினைவிடத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயல்பாடுகள் பேசுபொருளாகியிருந்தன.

திலீபனின் நினைவிடத்துக்கு தாமே சொந்தக்காரர்கள் என்பதுபோல முன்னணியினர் நடந்து கொண்டதால் அங்கே அமைதியின்மை தோன்றியிருந்தது.

ஆனால், இவ்வாண்டு திலீபனின் நினை விடத்தில் அவரது நினைவுகூரல்கள் ஆரம்பமான போது அங்கே முன்னணியினர் வழமையைப்போல காணப்படவில்லை. இதனால் திலீபன் நினைவஞ்சலி ஆரம்ப நிகழ்வுகள் சுமுகமாக நடந்தேறின.

பல ஆண்டுகளாக முன்னணியினர் திலீபனின் நினைவுதினத்தையொட்டி பொத்துவில் முதல் நல்லூர் வரையான ஊர்திப் பவனியை நடத்தி வருகின்றனர். அது பல வருடங்களாக நடந்துவருகின்றது.

ஆனால், வழக்கத்துக்கு மாறாக இவ்வருடம் மாத்திரம் திருகோணமலையில் ஓர் எல்லைக் கிராமமான சர்தாபுர என்னுமிடத்தில் மிகச்சிறிய கூட்டம் ஒன்று அதனை மறித்து தாக்குதல் நடத்தியிருக்கின்றது.

அதுவும் பொலிஸார் முன்னிலையில் நடந்திருப்பதாகக் கூறப்படுகின்றது. தாக்குதலுக்கு உள்ளானவர்களில் ஒருவர் மக்கள் பிரதிநிதி. அவர் மீது தாக்குதல் நடத்தப்படுகின்ற காட்சிகள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றன.

இத்தனை ஆண்டுகளாக இதுபோன்ற ஊர்வலம் வந்தபோதெல்லாம் கண்டுகொள்ளாத இந்த சிங்கள பெரும்பான்மையினர் இப்போது தாக்குதல் நடத்தியிருப்பது எதை உணர்த்துகின்றது? கடந்த பல ஆண்டுகளாக இல்லாத வகையில் இனங்களுக்கு இடையேயான முறுகல்நிலை அல்லது இனவாத உணர்வு ஊட்டப்பட்டிருக்கின்றதா என்ற கேள்வியையே இந்தச் சம்பவம் எழுப்பியிருக்கின்றது.

இந்தச் சம்பவம் நடந்த பின்னர், தான் எழுதிய குறிப்பு ஒன்றை தெற்கின் அரசியல்வாதி ஒருவர் இந்த ஊர்க்குருவிக்கு பகிர்ந்திருந்தார். அவர் ஒருகாலத்தில் தீவிர இனவாதியாக இருந்தவர். அண்மைக்காலத்தில் தன்னை - தனது அரசியலை மாற்றிக்கொண்டவர். யுத்த காலத்தில் எல்லைக் கிராமங்களில் தீவிர அரசியலில் ஈடுபட்டவர்.

அவரின் பல கருத்துகள் இந்த ஊர்க்குருவிக்கு உடன்பாடானதல்ல. இதுபோன்ற ஊர்வலங்களுக்கே அனுமதி வழங்கியிருக்கக்கூடாது என்பது அவரின் கருத்தாக இருந்ததைக் காணமுடிந்தது. ஆனாலும் அவரின் மற்றுமொரு கருத்து கவனத்துக்கு உரியது.

'இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த தமிழ் அரசியல்வாதிகள் மாத்திரமல்ல, அசுத்த நீரில் மீன் பிடிக்கும் சந்தர்ப்பவாத குழுக்களும் இதனை சாதகமாக்கிக் கொள்வார்கள். இதை அனுமதிப்பதும் பதற்றமான சூழ்நிலையில் பொலிஸார் செயல்படாமல் இருப்பதும் பல பிரச்னைகளை எழுப்புகின்றன. ஜெனிவா மனித உரிமைகள் மாநாடு நடத்தப்படும்போது, அரசாங்கம் எந்த நோக்கத்திற்காக இத்தகைய தூண்டுதல்களுடன் வேலைத் திட்டங்களை சாதிக்க அனுமதிக்கிறது? தமிழ் இனவாத அரசியல்வாதிகளின் பிரிவினைவாத உத்திகளுக்குத் தேவையான சிங்கள மக்களைத் தூண்டிவிடுவதே இவர்களின் திட்டம் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. அத்தகைய திட்டத்தை ஏன் அனுமதிக்க வேண்டும்? யார் அனுமதிப்பார்கள்? மயங்கி விழுந்துவிடாத அளவுக்கு புத்திசாலித்தனமாக இருக்க வேண்டும் என்பது உண்மைதான், ஆனால் சாதாரண மக்கள் அத்தகைய சூழ்நிலையை எவ்வாறு எதிர்கொள்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியாது. ஆனால், பொலிஸ், பாதுகாப்பு மற்றும் புலனாய்வு அமைப்புகள் இதுபோன்ற நிகழ்ச்சிகளைத் தடுப்பது அவர்களின் பொறுப்பு.'

அவர் எழுப்பியுள்ள கேள்வி நியாயமானது. இதுபோன்ற சம்பவங்களை தடுக்காமல் -

இனங்களுக்கிடையே முறுகல் நிலையை ஏற்படுத்த விரும்புபவர்களின் நோக்கம் தடுக்கப்படவேண்டும். இது தொடர்ந்தால் நாடு இன்னும் அதலபாதாளத்திற்கே செல்லும்.!

**- ஊர்க்குருவி.**

# எம்.பிக்களுக்கு உயிராபத்து சூத்திரதாரிகள் கைதாகுவர்!!

## பிரதமர் தினேஷ் உறுதி



கொழும்பு, செப். 20

"மக்களின் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உயிராபத்தை ஏற்படுத்தும் விதத்தில் நடந்துகொண்ட அனைவரும் கைது செய்யப்படுவார்கள். அந்தச் சம்பவங்களின் பின்னாலுள்ள சூத்திரதாரிகளும் கைது செய்யப்படுவார்கள்."

- இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்தன உறுதியளித்தார்.

திருகோணமலையில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது குண்டர் குழு தாக்குதல் நடத்தியுள்ளது. அதேவேளை, அனுராதபுரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன பயணித்த வாகனம் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த இரு சம்பவங்கள் தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்தன கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பாராளுமன்ற உறுப்பினர்களைத் தாக்குவதற்கு எவருக்கும் உரிமை கிடையாது. கொட்டன்கள் கொண்டு தாக்கியும், துப்பாக்கியால் சுட்டும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்த குழுவினர் கைது செய்யப்படுவார்கள். இந்தச் சம்பவங்களின் பின்னாலுள்ள சூத்திரதாரிகளும் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்படுவார்கள்.

நாட்டில் இன வன்முறையை மீண்டும் தூண்டச் சிலர் முயற்சிக்கின்றனர். அதற்கு அரசு ஒருபோதும் இடமளிக்காது." - என்றார். (அ)

# சேவைக்கு திரும்பிய மருத்துவர்களுக்கு ஊதியம் இன்னும் கொடுக்கப்படவில்லை!

கொழும்பு, செப். 20

ஓய்வு பெற்ற பின்னரும் தொடர்ந்து பணியாற்றுமாறு கோரப்பட்டுள்ள ஏழு விசேட மருத்துவர்களுக்கு சம்பளம் மற்றும் ஓய்வூதியம் வழங்குவதாக சுகாதார அமைச்சு உறுதியளித்த போதிலும் கடந்த மூன்று மாதங்களாக எவ்வித கொடுப்பனவும் வழங்கப்படவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆண்டு ஓய்வு பெறவிருந்த 69 நிபுணர்களில் 53 பேர் ஏற்கனவே ஓய்வு பெற்றுள்ளனர். இவர்களில் ஏழு பேர் மட்டுமே சுகாதார அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் பணியில் இணைந்துள்ளனர் என்று கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கில நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், பணிக்கு திரும்பிய இந்த ஏழு மருத்துவ நிபுணர்களுக்கான சம்பளம் மற்றும் ஓய்வூதியத்தை சுகாதார அமைச்சு இன்னும் வழங்கவில்லை.

மீள அழைக்கப்பட்ட மருத்துவர்களில் ஒருவரான ஹோமாகம மருத்துவமனையின் சிரேஷ்ட விசேட சத்திரசிகிச்சை நிபுணரான மருத்துவர் தம்மிக விக்கிரமசேகர, தான் ஜூன் மாதம் ஓய்வுபெற்றார் என்றும், ஆனால், மருத்துவமனையின் அவசர தேவைகள் காரணமாக மீண்டும் அழைக்கப்பட்டாரெனவும் அவர் பணிக்குத் திரும்பியதிலிருந்து கூடுதல் நேரக் கட்டணம் உட்பட எந்தப் பணமும் பெறவில்லை எனவும் தெரிவித்தார்

எவ்வாறாயினும், இந்த பிரச்னை குறித்து சுகாதார அமைச்சு பொது சேவைகள் ஆணையத்திடம் அறிவித்த போதிலும் இதுவரை பதில்கள் கிடைக்கவில்லை.

சுகாதார அமைச்சு இந்த விடயத்தில் உடனடியாக கவனம் செலுத்துவதும், மீள அழைக்கப்பட்ட நிபுணர்களுக்கு அவர்கள் வாக்குறுதியளிக்கப்பட்ட சம்பளம் மற்றும் ஓய்வூதியம் கிடைப்பதை உறுதி செய்வதும் மிக முக்கியமானது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தீயால் வீட்டை இழந்த சிறுமிக்கு புதிய வீடு நிர்மாணிக்க நிதியுதவி

கொழும்பு, செப். 20

தெரணியகல - உடமாலிபொட பிரதேசத்தில் தீயினால் எரிந்து நாசமான சனுகி விஹங்கா என்ற சிறுமிக்கு புதிய வீடொன்றை நிர்மாணிக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் செவன நிதியிலிருந்து ஏழரை இலட்சம் ரூபாய் வழங்கப்படவுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கு அமைவாக புதிய வீட்டை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கேகாலை மாவட்ட முகாமையாளரிடம் அறிக்கை பெற்றுள்ளதாக அதன் தலைவர் ரஜீவ் சூரியாராச்சி கூறுகிறார். அதன்படி, அடுத்த இரண்டு மாதங்களுக்குள் சிறுமிக்கு புதிய வீடு கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

தெரணியகல, உடமாலிபொட பிரதேசத்தில் வசிக்கும் சனுகி விஹங்கா சிறுமியினுடைய வீடு கடந்த 14 ஆம் திகதி இரவு ஏற்பட்ட தீயினால் முற்றாக எரிந்து நாசமானது. இது தொடர்பில் ஊடக தகவல்கள் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. இதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சனுகியின் தந்தைக்கு நிரந்தர வேலை இல்லை. அவர்கள் கூலி வேலை செய்து வாழ்க்கை நடத்தினார்கள். வீடு தீயில் எரிந்து நாசமானதால், தற்போது மெழுகு துணியால் மூடப்பட்ட தற்காலிக வீட்டில் வசித்து வருகின்றனர். அதனால் புதிய வீடு கட்டுவது அவர்களுக்கு மிகவும் கடினமான வேலையாகிவிட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கடையில் பியர் அருந்தியவர்களை தாக்கிய பொலிஸார் இருவர் கைது!

கண்டி, செப். 20

கடை ஒன்றில் பியர் அருந்திக் கொண்டிருந்த இருவரை தாக்கினர் என்ற குற்றச்சாட்டில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் கான்ஸ்டபிள் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களான இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களாலும் தாக்கப்பட்ட இருவர் பேராதனை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தலாத்து ஓயா குருதெனிய வீதியிலுள்ள கடை ஒன்றில் நேற்று முன்தினம் இருவர் பியர் அருந்திக் கொண்டிருந்தனர். இதன்போது தலாத்து ஓயா பொலிஸின் ஊழல் ஒழிப்பு பிரிவினர் அந்த இடத்துக்குச் சென்று அங்கு பியர் குடிக்கக்கூடாது என்று எச்சரித்தனர்.

இதைடுத்து ஏற்பட்ட தர்க்கம் கைகலப்பானதில் கான்ஸ்டபிளும் சார்ஜன்டும் தடி மற்றும் மண்வெட்டியால் பியர் அருந்திய இருவரை தாக்கினர் என்று கூறப்படுகின்றது. இதையடுத்தே இருவரும் கைது செய்யப்பட்டனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
20.09.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 03

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# நினைவு கூர்தலுக்கான பொதுக்கட்டமைப்பு

நினைவு கூர்தல் தொடர்பான பிரச்னை மீளவும் பேசுபொருளாகியிருக்கின்றது. கடந்த ஆண்டு, திலீபனின் நினைவு கூர்தலை முன்வைத்து, சில சர்ச்சைகள் ஏற்பட்டிருந்தன. இந்தப் பின்புலத்தில் நினைவு கூர்தல்களை பொது கட்டமைப்பு ஒன்றின் ஊடாகவே மேற்கொள்ள வேண்டுமென்னும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

ஒரு குறித்த அரசியல் கட்சியினால் இவ்வாறான விடயங்கள் முன்னெடுக்கப்படுவது பொருத்தமானதல்ல. அது தவிர்க்கப்பட வேண்டும் - என்னும் நிலைப்பாட்டை முன்வைத்தே, இவ்வாறான கோரிக்கைகள் மேலெழுந்தன. நினைவு கூர்தல்களை ஒரு கட்சி முன்னெடுக்கும் போது, அது ஒரு கட்சியின் அரசியல் வேலைத் திட்டமாக நோக்கப்படும். அதேவேளை குறித்த நினைவு கூர்தலும் அதன் கனதியை இழந்து போகும். யுத்தம் முடிவுற்ற காலத்திலிருந்து இந்த விடயம் விவாதிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்படவில்லை.

நினைவு கூர்தலின் போது கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான விடயம் - நினைவு கூர்தல் மற்றவர்களால் மதிக்கப்படக் கூடியதாக இருக்க வேண்டும் - ஒரு வேளை மதிக்கப்படக் கூடிய சூழல் இல்லாவிட்டால் கூட, அவமதிப்பிற்கு உள்ளாகக் கூடாது. அவ்வாறான சூழல் ஏற்படுவதை தவிர்க்க வேண்டும். நினைவு கூர்தல்களை ஒரு குறிப்பிட்ட கட்சியானது, அதன் அரசியல் செயற்பாடாக முன்னெடுக்கும் போது, குறித்த கட்சியொன்றின் செயற்பாடாகவே அது நோக்கப்படும். குறித்த கட்சியின் மீது மாறுபட்ட பார்வையை கொண்டிருப்பவர்கள், தங்களது பார்வையின் ஊடாகவே நினைவு கூர்தலையும் அளவிட முற்படுவார்கள்.

இதன் காரணமாகவே நினைவு கூர்தலின் மதிப்பை பாதுகாப்பதற்கு, நினைவு கூர்தல்கள் ஒரு பொதுக்கட்டமைப்பின் ஊடாக - நேர்த்தியான ஏற்பாடுகளுடன் முன்னெடுக்கப்பட வேண்டுமென்னும் கோரிக்கையை சிவில் சமூக குழுக்கள் முன்வைத்தன. அந்த முயற்சி வெற்றிபெற்றிருந்தால் திருகோணமலையில் இடம்பெற்றது போன்றவாறான செயல்பாடுகளை தவிர்த்திருக்கலாம். மேலும் கிழக்கு மாகாணம் மூவின மக்கள் வாழும் பகுதி - எனவே அவ்வாறானதொரு சூழலில் சிங்களவர்களும் முஸ்லிம்களும் தமிழர்களின் நினைவு கூர்தலை ஆதரிப்பதற்கான வாய்ப்பில்லை. அதனை தமிழர்கள் எதிர்பார்க்கவும் முடியாது.

திருகோணமலை சம்பவம் இடம்பெற்ற போது, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இருந்த காரணத்தினால்தான், தற்போது குறித்த சம்பவம் பேசுபொருளாகியிருக்கின்றது. இல்லாவிட்டால் அரசாங்கம் இதனை ஒரு விடயமாகவே கருத்தில் கொண்டிருக்காது. நினைவு கூர்தல்களை ஒரு குறிப்பிட்ட இடத்தில் முன்னெடுப்பதே சரியானது. அதன் மூலமே குறித்த நினைவு கூர்தலை மதிப்பு வாய்ந்த ஒன்றாக பாதுகாக்க முடியும். அவ்வாறில்லாது, நினைவு கூர்தலை ஒரு அரசியல் வேலைத்திட்டமாக முன்னெடுத்தால், நினைவு கூர்தலின் புனிதத்தை பாதுகாக்க முடியாமல் போகும்.

யுத்தம் முடிவுற்ற காலத்திலிருந்து களத்திலும் புலத்திலும் நினைவு கூர்தல்கள், முட்டி மோதுதல்களுடன்தான் இடம்பெற்றுவருகின்றது. ஓர் அமைப்பு முன்னெடுக்கும் விடயத்தை - பிறிதொரு அமைப்பு விமர்சிக்கும், எதிர்க்கும் போக்கே இன்றுவரையில் தொடர்கின்றது. ஆரம்பத்தில் இவ்வாறான விடயங்களின் கரிசனையை காண்பித்தவர்கள் ஒரு கட்டத்திற்கு பின்னர் இதிலிருந்து ஒதுங்கி விட்டனர். நினைவு கூர்தலுக்கான பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதன் ஊடாக, மட்டுமே இந்தப் பிரச்னையை சரிசெய்ய முடியும்.

## சட்டவிரோதமாக ரியூனியன் தீவு சென்ற 7 இலங்கையர் நாடு கடத்தப்பட்டனர்!

கொழும்பு, செப். 20

பிரான்ஸின் கட்டுப்பாட்டில் இந்து சமுத்திரத்தில் உள்ள ரியூனியன் தீவில் இருந்து நாடு கடத்தப்பட்ட ஏழு இலங்கையர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை நாடு திரும்பினர்.

கைது செய்யப்பட்டவர்கள் மட்டக்களப்பு மற்றும் புத்தளம் பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவர்கள் புகலிடம் கோரும் நோக்கில் சட்டவிரோதமான முறையில் ரியூனியன் தீவுக்கு சென்றுள்ளனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் காவலில் வைக்கப்பட்ட இவர்கள் பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர். (ஐ)

## மன்னாரில் இன்று 9 மணி நேர நீர் வெட்டு!

மன்னார், செப். 20

மன்னார் நீர் வழங்கல் திட்டத்தில் அவசர திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலான 9 நேர நீர் விநியோக தடை பின்வரும் பகுதிகளில் அமுலாகும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

முருங்கன் மற்றும் அண்டிய பகுதிகள், மன்னார் நகர் மற்றும் அண்டிய பகுதிகள், பள்ளிமுனை மற்றும் அண்டிய பகுதிகள், எழுத்தூர் மற்றும் அண்டிய பகுதிகள், தோட்டவெளி, சிறுத்தோப்பு, எருக்கலம்பிட்டி, வங்காலை மற்றும் அண்டிய பகுதிகள், அடம்பன் மற்றும் அண்டிய பகுதிகள், திருக்கேதீஸ்வரம் மற்றும் நாகதழ்வு ஆகிய பகுதிகள் நீர் விநியோகத் தடையால் பாதிக்கப்படும்.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது. இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## யோகக்கலை கற்கைநெறி

யாழ்ப்பாணம், செப். 20

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6.00 மணி முதல் காலை 8.00 மணி வரை நடைபெறும் இந்த வகுப்புகளில் ஆர்வமுள்ள இரு பாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலத்தைக் கொண்டமைந்த இந்த அடிப்படை கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப் பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன. பயிலவிரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலா ளர் ம. பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். (ஐ)

## சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப். 20

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் நடத்தப்படும் வாராந்த சுக்கிரவார சிறப்பு சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கத்தின் தலைமையுரையை தொடர்ந்து சிறப்பு சொற்பொழிவை இளம் சைவப் புலவர் க. கயிலைவாசன் 'திருப்பெரும் வடிவம்' என்னும் விடயப்பொருளில் ஆற்றுவார்.

சொற்பொழிவின் இறுதியில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

## பெரிய புராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப். 20

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவஸ்ரீ பால. திருகுணானந்த குருக்கள் நடத்தும் வாராந்த பெரிய புராண சிறப்புச் சொற்பொழிவு தொடர் 24 (புகழ் துணை நாயனார்) ஆனைக்கோட்டை - சாவற்கட்டு அந்திக்குழி ஞானவைரவர் காளி அம்பாள் ஆலய பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் சேக்கிழார் பெருமானின் குருபூஜையை தொடர்ந்து சொற் பொழிவை இளம் சைவப்புலவர் க. கயிலைநாதன் 'இறையருளால் காசைப் பெற்று சிவார்ச்சனை செய்து வாழ்ந்த நாயனார்' என்னும் விடயப்பொருளில் ஆற்றுவார்.

சொற்பொழிவின் இறுதியில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப் பட்டு பாராட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செப்ரெம்பர் - 20 புதன்கிழமை
சோபகிருது வருடம் - புரட்டாசி 03
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : சஷ்டி




**மேடம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

**இடபம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**மிதுனம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். வியாபாரத்தை விரிவு படுத்துவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**கடகம்**
எதிர்ப்புகள் அடங்கும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் முடியும். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**சிம்மம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். சகோதரங்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உங்கள் கை ஓங்கும். தைரியம் கூடும் நாள்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகும். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள் உடனே உணர்ச்சிவசப்பட்டுகத்தாதீர்கள். சக ஊழியர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
உணர்ச்சி வேகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**தனுசு**
ராஜதந்திரமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். இனிமையான நாள்.

**மகரம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வீடு வாகனத்தை சீர்செய்வீர்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். அந்தஸ்து உயரும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகி மகிழ்ச்சி அதிகரிக்கும். தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். நிம்மதி உண்டு.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் டென்ஷன் அதிகரிக்கும். அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். நிதானம் தேவைப்படும்.

# நிறைவேற்றிய வாக்குறுதிகள் தொடர்பில் வெள்ளை அறிக்கை வெளியிடுமா தி. மு. க.?

## எடப்பாடி பழனிசாமி கேள்வி



சென்னை, செப். 20

தேர்தல் அறிக்கையில் கொடுக்கப்பட்ட 520இற்கும் மேற்பட்ட வாக்குறுதிகளில், எந்தெந்த திகதிகளில், எந்தெந்த அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டன என்ற விபரத்தை தி. மு. க. அரசு வெள்ளை அறிக்கை வெளியிடுமா? என அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்:

"மக்களை எளிதில் மறக்கடித்துவிடலாம்"- என்ற நம்பிக்கையுடன் தி. மு. க., 2019ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலில் இருந்தே, நிறைவேற்ற முடியாத பல்வேறு பொய்யான வாக்குறுதிகளை அளித்து தமிழக மக்களின் வாக்குகளைப் பெற்று, 2019 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் வெற்றியைப் பெற்றது. அந்தத் தேர்தலின் போது, பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசிய திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சியினர் 38 தொகுதிகளில் வெற்றி பெற்று தமிழகத்துக்கு சாதித்தது என்ன?

கடந்த நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்ற பாராளுமன்ற கூட்டங்களில் தி. மு. க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் ஒருமுறையாவது தி. மு. க. தேர்தல் வாக்குறுதிகள் குறித்து ஏதேனும் பேசினார்களா? சபையின் கவனத்தை ஈர்க்கும் அளவுக்கு ஆர்ப்பாட்டங்களிலாவது ஈடுபட்டார்களா?

2019இல் கொடுத்த வாக்குறுதிகளில் எத்தனை வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளனர் என்ற விவரங்களை தி. மு. க. தலைவரும், தமிழக அரசின் முதல்வருமான ஸ்டாலின் வெளியிடத் தயாரா? எனது மேற்கண்ட கேள்விகளுக்கான பதில் 'இல்லை' என்பதே. தமிழக மக்களின் கவனத்தை 'எளிதில் எதையும் மறக்கடித்துவிடலாம்' என்ற நம்பிக்கையுடன், அதை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு, மீண்டும் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை அளிப்பது தி. மு. கவின் பரம்பரை பழக்கம்.

நூறு சதவீத வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டதாக மார்தட்டிக்கொள்ளும் தி. மு. க. அரசின் முதல்வர் ஸ்டாலின், 2021 சட்டமன்றப் பொதுத் தேர்தலின் போது, தேர்தல் அறிக்கையில் கொடுக்கப்பட்ட 520இற்கும் மேற்பட்ட வாக்குறுதிகளில், எந்தெந்த திகதிகளில், எந்தெந்த அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டன என்ற விவரத்தை அறிக்கை மூலம் தி. மு. க. அரசின் முதல்வர் அறிவிப்பாரா? சட்டமன்றத்தில் வெள்ளை அறிக்கை வெளியிடுவாரா?"

- என்றுள்ளது.

(ஐ)

# இராமேஸ்வரம் மீனவர்களை வானத்தைநோக்கி துப்பாக்கியால் சுட்டு விரட்டியது இலங்கை படை!

இராமேஸ்வரம், செப். 20

தனுஷ்கோடி - தலைமன்னார் கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை இலங்கை கடற்படையினர் வானத்தை நோக்கி சுட்டு விரட்டினர் என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

கடந்த 13ஆம் திகதி 13 இராமேஸ்வரம் மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதனை கண்டித்து மீனவர்கள் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில், மீனவர்கள் மூன்று நாட்களுக்கு பின்னர் நேற்று மீன் பிடிக்க கடலுக்குள் சென்றனர்.

தனுஷ்கோடி மற்றும் தலைமன்னார் இடையே மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் துப்பாக்கியால் வானத்தை நோக்கி சுட்டனர். இதனால் பயந்துபோன மீன் பிடிக்காமல் கரை திரும்பினர்.

இதனால் ஒவ்வொரு விசைபடகிற்கும் ரூ.70 ஆயிரம் வரை நட்டம் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் குற்றம் சாட்டினர். தொடர்ந்து இது போன்று நடைபெறும் சம்பவங்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் நிரந்தர தீர்வு காணவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பா. ஜ. கவுடனான கூட்டணியை முறித்ததை வரவேற்கின்றேன்!


## அ. தி. மு. கவுக்கு சீமான் வாழ்த்து

சென்னை, செப். 20

பா. ஜ. கவுடனான கூட்டணியை முறித்துக் கொண்டதாக அறிவித்திருக்கும் அ. தி. மு. கவின் முடிவை முழுமையாக வரவேற்பதாக சீமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது எக்ஸ் (ருவிற்றர்) தளத்தில் வெளியிட்ட பதிவில்,

பா. ஜ. கவுடனான கூட்டணியை முறித்துக் கொண்டதாக அறிவித்திருக்கும் அ. தி. மு. கவின் முடிவை முழுமையாக வரவேற்கிறேன். மிகத் தாமதமான முடிவென்றாலும், சரியானதொரு முடிவு.



காங்கிரஸ், பா. ஜ. க. எனும் இரு இந்திய ஒன்றிய கட்சிகளுமே தமிழ்நாட்டுக்கும், தமிழினத்துக்கும் எதிரிகள்தான். அவை தமிழ்த் தேசிய இனத்தின் உரிமை, உணர்வு, உயிர், நிலம், வளம், அதனுடையப் பாதுகாப்பு, எதிர்கால நலவாழ்வு என எல்லாவற்றிற்கும் எதிரானவையே.

பாஜகவுடனான உறவைத் துண்டித்திருக்கும் இந்நிலைப்பாட்டில் அ. தி. மு. க. இறுதி வரை உறுதியாக இருக்குமானால் அவர்களுக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன் - என்று கூறியுள்ளார்.

(ஐ)

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்

# ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை பாகங்கள் மறைக்கப்படுவது ஏன்?

## சபையில் சஜித் பிரேமதாஸ கேள்வி

கொழும்பு, செப். 20

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் இரண்டாம் தொகுதியின் இரண்டாம் மற்றும் மூன்றாம் பாகங்களை பரிசீலனைக்காக கோரப்பட்ட போதிலும், அந்த கோரிக்கை புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதுவிடயத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் வழங்கப்பட்ட கட்டளைகளையே தற்போதைய அரசாங்கமும் நடைமுறைப்படுத்தி எதிர்க்கட்சித் தலைவருக்குக் கூட அந்த பகுதிகளை பரிசீலிக்க வாய்ப்பு வழங்க மறுத்துள்ளது. இதன்மூலம் எனது பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளது."

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாரிய கொலைகளும் அனர்த்தங்களும் இடம்பெற்று உயிர்கள் பலியாகி இன்றும் உண்மையான யதார்த்தத்தை நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்கள் அறியாத வேளையில், இதன் காரணமாக நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரிக்குள்ள உரிமையும் கூட மீறப்பட்டுள்ளதாகவும், பொதுச்செயலாளரின் மேற்பார்வையின் கீழ் அந்த ஆவணங்களை அணுகலாம் என்று கூறுவது நியாயமற்றது என்றும், தொடர்ந்தும் சாட்சியக் குறிப்புகள் மற்றும் சாட்சியங்களை மக்கள் பிரதிநிதிகளிடம் மறைக்காமல் உண்மையை வெளிப்படுத்தவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.



வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவதற்கு முன்பாக அந்த பகுதிகளை பரிசீலிப்பதற்கும் பெற்றுக்கொள்ளவதற்குமரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும், அவ்வாறு செய்யாமல் மறைத்து விட்டால் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்ட கைகளில் இரத்தம் தோய்ந்தவர்கள் தான் இவ்வாறு மறைப்பவர்கள் என்று தெரியவரும்.

கோட்டாபய அரசாங்கம் வழங்கிய கட்டளைகளை இந்த அரசாங்கமும் நடைமுறைப்படுத்துவது தவறு. இந்த அறிக்கைகள் 225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மறைக்கக்கூடாது -என்றார். (அ)

# சூழ்ச்சியாலேயே ராஜபக்ஷக்கள் பதவியிலிருந்து வீழ்த்தப்பட்டனர்

## அம்பலப்படுத்துவோம் என்கிறார் ஜோன்ஸ்டன்

கொழும்பு, செப். 20

"கோட்டாபய மற்றும் மஹிந்த ஆகியோர் எவ்வாறு பதவியில் இருந்து விரட்டப்பட்டனர் என்பது தொடர்பான சூழ்ச்சித் திட்டத்தை அடுத்த ஜனாதிபதித் தேர்தலின்போது அம்பலப்படுத்துவோம்." - என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரே நாடு, ஒரே சட்டம் என்பதற்காகத்தான் கோட்டாபய ராஜபக்ஷவை நாம் ஆட்சிக்கு கொண்டுவந்தோம். எனினும், அவரால் ஆட்சியை நிர்வகிக்க முடியாமல்போய்விட்டது. இதுவிடயத்தில் என்ன நடந்தது என்பது தொடர்பான தகவல்களை ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதும், வெளிப்படுத்துவோம். இவை தொடர்பான தகவல்கள் அரச இரகசிய தகவல் பெட்டியில் உள்ளது .

மஹிந்த ராஜபக்ஷவை எப்படி விரட்டினார்கள், அதன் பின்னணியில் செயற்பட்டது யார், ஜனாதிபதித் தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் அது பற்றி நாம் கதைப்போம். மஹிந்த ராஜபக்ஷவை விரட்டியதன் விளைவையே தற்போது மக்கள் அனுபவிக்கின்றனர்- என்றார். (அ)

# 6 நிறுவனங்களுக்கு கோப் குழு அழைப்பு

கொழும்பு, செப். 20

ஊழல் மற்றும் முறைகேடுகள் குறித்து விசாரணை செய்வதற்காக 06 அரச நிறுவனங்கள் எதிர்வரும் நாட்களில் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு என அழைக்கப்படும் கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளன.

இலங்கை தேயிலைச் சபை, கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனம், கொழும்பு பல்கலைக்கழகம், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம், எல்கடுவ பிளான்டேசன் போன்ற அரச நிறுவனங்களே கோப் குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளன.

இலங்கை தேயிலைச் சபை நேற்று அழைக்கப்பட்டதுடன் கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தை இன்று முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு எதிர்வரும் 3ஆம் திகதி கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளது. (அ)

# பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் செயல்திட்டத்திற்கு தென்கொரியா ஆதரவு

## ரணிலிடம் கூறினார் அந்நாட்டு ஜனாதிபதி



கொழும்பு, செப். 20

பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்றிட்டத்திற்கு ஆதரவளிப்பதாக தென் கொரிய ஜனாதிபதி யுன் சுக் ஜியோல் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளுக்கான தென் கொரிய நிரந்தர வதிவிட தூதுக் குழு அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இலங்கை எதிர்கொண்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டையும் மக்களையும் விடுவிப்பதற்கான ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தை தென் கொரிய ஜனாதிபதி பாராட்டியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கை மற்றும் தென் கொரியாவிற்கு இடையில் வர்த்தக மற்றும் முதலீட்டு தொடர்புகளை பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் இரு தலைவர்களும் இந்த சந்திப்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

தென் கொரியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு தென்கொரிய ஜனாதிபதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு அழைப்பு விடுத்துள்ளார். (அ)

# மேலும் இரு பிரேரணைகளை முன்வைக்க எதிரணி திட்டம்!

கொழும்பு, செப். 20

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் மேலும் இரு அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவருவது தொடர்பில் எதிரணிகள் கலந்துரையாடி வருகின்றன.

விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஆகிய இருவருக்கு எதிராகவே தனித்தனியாக நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் முன்வைக்கப்படவுள்ளன.

இவ்விரு அமைச்சுகளும் விவசாயிகள் உட்பட மக்கள் மத்தியில் நம்பிக்கை இழந்துவரும் நிலையில், தேசிய சொத்து விற்பனை, முறையற்ற தீர்மானங்கள், விலைமனுகோரலில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் மோசடி உள்ளிட்ட காரணங்களை மையப்படுத்தியே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சருக்கு எதிராக அண்மையில் முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டிருந்தாலும் சாதாரண பெரும்பான்மையை (113) தக்கவைத்துக் கொள்ளவே கடுமையாக போராட வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டது.

எனவே, பிரேரணைகளை வெற்றிபெற வைப்பதைவிடவும் அரசுமீது மக்களுக்கு உள்ள அதிருப்தியை வெளிப்படுத்தும் விதமாக நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் முன்வைக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உள்ளது. (அ)

# ஜனாதிபதி செயலணி பணியாளர் என கூறி நிதி மோசடியில் ஈடுபட்ட ஒருவர் சிக்கினார்!

கொழும்பு, செப். 20

ஜனாதிபதி செயலணியில் பணியாற்றுவதாக கூறி, வெளிநாடுகளில் தொழில் வாய்ப்பை பெற்றுத் தருவதாக பாரியளவான நிதி மோசடியில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

நியூசிலாந்து, நெதர்லாந்து, தென்கொரியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் தொழில் வாய்ப்பு வழங்குவதற்கான வேலைத்திட்டம் உள்ளதாகவும், அதற்கு ஒருவருக்கு தலா 15 இலட்சம் ரூபா செலவாகும் எனவும் அவர் கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்த தொகையில் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை முற்பணமாக செலுத்த வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்தநிலையில், கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் சந்தேக நபரை நூதனமான முறையில் பத்தரமுல்லை பகுதிக்கு வரவழைத்துள்ளனர்.

இதன்போது, சந்தேகநபர், ஜனாதிபதி அலுவலகம் என்ற பெயர்ப் பலகையை காட்சிப்படுத்திய வகையில் கார் ஒன்றில் குறித்த பகுதிக்கு பிரவேசித்துள்ளார்.

அத்துடன், தாம் ஒரு அரச அதிகாரி என கூறியதுடன், வெளிநாட்டில் தொழில் வழங்கும் வகையிலான போலி ஒப்பந்தம் ஒன்றையும் காண்பித்துள்ளார்.

இந்தநிலையில், அவர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகளால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உத்திக எம்.பியின் வாகனம் மீது சூடு நடத்தியோரை உடனே கைது செய்க!

## எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

கொழும்பு, செப். 20

**பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவின் வாகனத்தின் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட சந்தேக நபர்களை கூடிய விரைவில் சட்டத்திற்கு முன்கொண்டு வர அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் கடமை.

தாக்குதலுடன் தொடர்புடைய சகலரையும் சட்டத்திற்கு முன் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அனைவரதும் கடமையாகும்.

உத்திக பிரேமரத்னவுக்கு வழங்கும் பாதுகாப்பை அதிகரிக்கவேண்டும். தாக்குதல் தொடர்பாக துரிதமாக விசாரணைகளை நடத்தி சந்தேக நபர்களுக்கு தண்டரைன வழங்குங்



கள்-என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவிக்கையில்-

சம்பவம் பயங்கரமானது. துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட நபரை கண்டுபிடிப்பதை விட துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டமைக்கான சதித்திட்டத்தை கண்டறிவது முக்கியமானது. சதித்திட்டத்தின் பின்னர் சென்று சம்பவம் தொடர்பான விடயங்களை கண்டறியுமாறு பொலிஸாரிடம் கோரிக்கை விடுக்கின்றேன் -என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் தாயசிறி ஜயசேகர தெரிவிக்கையில்-

சம்பவத்தை சாதாரண விடயமாக கருதிவிட வேண்டாம். இது சகல பாராளுன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலாக பார்க்கப்பட வேண்டும். சம்பவம் குறித்து உரிய விசாரணைகளை நடத்த வேண்டும்-என்றார். (அ)

# மாணவியை துஷ்பிரயோகம் செய்த கணிதபாட ஆசிரியர் கைதானார்!

கொழும்பு, செப். 20

வத்தேகம பகுதியில் பாடசாலை மாணவியொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த மேலதிக வகுப்பு ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

44 வயதுடைய கணிதப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

வத்தேகம பகுதியில் அமையப்பெற்றுள்ள தனியார் வகுப்பறையில் நீண்ட நாட்களாக குறித்த மாணவியை ஆசிரியர் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள ஆசிரியரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# நிட்டம்புவ ஏ.ரி.எம். இயந்திரம் உடைக்கப்பட்டுக் கொள்ளை!

கொழும்பு, செப். 20

நிட்டடம்புவ நகரில் தன்னியக்க பணப்பரிமாற்ற இயந்திர கொள்ளைச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த இயந்திரம் நேற்று முன் தினம் இரவு உடைக்கப்பட்டு அதிலிருந்த 7,851,000 ரூபாய் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அருகிலிருந்த சி.சி.ரி.வி கமெரா காட்சிகளின் உதவியுடன் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பல குழுக்கள் அமைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருதாகவும் நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பிரபல பாடசாலை ஒன்றிலிருந்து துப்பாக்கி, தோட்டாக்கள் மீட்பு!

கொழும்பு, செப். 20

மாத்தறை வெல்லமட மகிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்தின் பழைய கட்டடத்தின் கூரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பல வெடிபொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த கட்டடம் புனரமைக்கப்படும் நிலையில், இந்த வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, வெளிநாட்டு தயாரிப்பு என சந்தேகிக்கப்படும் ரீ -56 ரக துப்பாக்கி மற்றும் அதற்கு பயன்படுத்தப்படும் 21 தோட்டாக்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன், வேறு வகையான 136 தோட்டாக்கள் மற்றும் 2 டெட்டோனேட்டர்கள் உள்ளிட்ட பல வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# உயர்தரப் பரீட்சை தொடர்பில் ஆணையாளரே இறுதி முடிவு!



கொழும்பு, செப். 20

எதிர்வரும் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள உயர்தரப் பரீட்சை தொடர்பில் தீர்மானம் மேற்கொள்வதற்கு பரீட்சை கள் ஆணையாளர் நாய கத்துக்கு அதிகாரம் உள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றில் நேற்று தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் தாமதமாகி வெளியானதன் காரணமாக, 2023 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு அநீதி ஏற்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரட்ன சுட்டிக்காட்டினார்.

எனவே, இந்த வருடத்தில் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி திட்டமிட்டுள்ள உயர் தரப்பரீட்சையை அடுத்த வருடம் ஜனவரி மாதம் 22ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி வரையில் நடத்த முடியும் என அவர் யோசனை முன்வைத்தார்.

அதன்பின்னர் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி முதல் பாடசாலைகளின் முதலாம் கட்ட கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும்.

குறித்த பரீட்சை பெறுபேறுகள் மூன்று மாத காலப்பகுதிக்குள் வெளியிடப்படுமானால், அடுத்த வருடம் ஒக்ரோபர் மாதம் முதல் வழமையான வகையில் உயர்தரப் பரீட்சையை நடத்த முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரட்ன தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த கல்வியமைச்சர், குறித்த யோசனை பரீட்சைகள் ஆணையாளருக்கு அனுப்பப்படுவதுடன், அவர் இது தொடர்பான இறுதி தீர்மானத்தை எடுப்பார் எனவும் குறிப்பிட்டார். (அ)

# கிழக்கு மாகாண ஆளுநரைப் பதவி விலக்க ஒரு இலட்சம் கையெழுத்து திரட்டும் பிக்குகள்

வஹிருமலை, செப். 20

கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு எதிராக ஒரு இலட்சம் கையெழுத்துகளை திரட்டும் நடவடிக்கை ஐக்கிய சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மணிக்கூட்டு கோபுரத்துக்கு முன்பாக நேற்று காலை முதல் கையெழுத்து திரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு இலட்சம் கையெழுத்துகள் இதில் திரட்டப்பட உள்ளன.

திருகோணமலை -நிலாவெளி, பெரியகுளம் பகுதியில் நிர்மாணிக்கப்படவிருந்த விகாரையின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க அனுமதி வழங்குமாறு கோரி மாவட்ட செயலகத்திற்கு முன்பாக பிக்குகள் கடந்த 28ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த விகாரை நிர்மாணிப்பதால் காணப்படும் பிரச்னை குறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிக்குகளுக்கு அரச அதிபர் அலுவலகத்தில் வைத்து ஆளுநரால் விளக்கம் அளிக்கப்



பட்டு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை அனைத்து இன மக்களும் வாழும் ஒரு பிரதேசமாகும். பிக்குகளின் செயற்பாடுகள் போல் ஏனைய இனத்தவரும் இவ்வாறானதொரு செயற்பாடுகளை முன்னெடுப்பார்களானால் அதற்கு நீங்களே ஒரு முன்னுதாரணமாக செயற்படுவீர்கள் என ஆளுநர் செந்தில் தொண்டமான் இதன்போது தெரிவித்திருந்தார்.

பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட கடிதத்தை மீளப்பெற்றாலும், பிரதேச சபையின் அனுமதியின்றி எந்த ஒரு கட்டுமானப்பணிகளும் முன்னெடுக்க முடியாது எனவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்நிலையில், ஆளுநரை பதவி விலக்க வேண்டுமென வலியுறுத்தியே ஒரு இலட்சம் கையெழுத்தை திரட்டும் நடவடிக்கையை ஐக்கிய சங்கம் ஆரம்பித்துள்ளது. (அ)

# இலங்கையில் அதிகரித்துள்ள இளவயது மாரடைப்பு மரணம்!

கொழும்பு, செப். 20

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் மரண விசாரணை பிரிவினரால் கடந்த மூன்று மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட 1500 மரண விசாரணைகளில் 50 வயதுக்குட்பட்ட 100 பேர் மாரடைப்பு மற்றும் நீரிழிவு நோயினால் உயிரிழந்துள்ளது தெரிய வந்துள்ளதாக கொழும்பு மரண விசாரணை அதிகாரி இரேஷா சமரவீர தெரிவித்தார்.

50 முதல் 60 வயதுக்குட்பட்டவர்களுடன் தொடர்புடைய 200 இறப்புகள் மாரடைப்பு மற்றும் நீரிழிவு நோயால் ஏற்பட்டதாகவும் அவர் கூறினார்.

குறித்த காலப்பகுதியில் ஏற்பட்ட திடீர் மரணங்களில் மூன்றில் ஒரு பங்கு மாரடைப்பினால் ஏற்படுவதாகவும், மாரடைப்பினால் இளைஞர்கள் இறக்கும் போக்கு அதிகரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இறந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களின் தகவல்களின் படி, இவர்களில் பெரும்பாலானவர்கள் துரித உணவுகளுக்குப் பழகி வருவதாகவும் அவர்களில் சிலர் வேலை மற்றும் கல்விக்காக வீட்டை விட்டு வெளியே இருப்பதாகவும் அவர் கூறினார். (அ)

# வங்குரோத்து அடைந்துள்ள நாட்டில் நிதி மத்திய நிலையம் கேலிக்கூத்து!

## சுட்டிக்காட்டினார் ஹர்ச டி சில்வா

கொழும்பு, செப். 20

**வங்குரோத்து அடைந்த நாட்டில் நிதி மத்திய நிலையம் ஒன்றை ஏற்படுத்துவது என்பது கேலிக்குரிய கதை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ச டி சில்வா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொழும்பு துறைமுக நகரின் பெயர் கொழும்பு நிதி நகரம் என்று மாற்றப்படும் என்று கூறினாலும் அதனை செய்யக் கூடாது என நினைக்கின்றேன்.

சிங்கப்பூர் மற்றும் துபாய் நாடுகளில் இப்படியான நகரங்கள் அமைந்துள்ளன. இந்த இரண்டு நடுவில் நிதி நகரம் ஒன்றை ஏற்படுத்துவது இலகுவான காரியமல்ல.

அடுத்த வாரம் துபாய் சென்ற கொழும்பு நிதி நகரம் என்று ஒன்றை அறிமுகம் செய்ய எவராவது முயற்சித்தால், அதனை மீளாய்வு செய்யுமாறு கோரிக்கை விடுக்கின்றேன்.

இந்தியாவுக்கு கூட இப்படியான நிதி மத்திய நிலையம் ஒன்றை ஏற்படுத்த முடியாமல் போனது.

நிதி நகரம் என்பதற்கு பதிலாக துறைமுக நகரில் அறிவியல் நிலையம் ஒன்றை ஏற்படுத்துவது சிறந்தது என்ற யோசனையை முன்வைக்கின்றேன்-என்றார். (அ)

# கொழும்பு துறைமுக நகர் 26ஆம் திகதி அறிமுகம்!

கொழும்பு, செப். 20

கொழும்பு துறைமுக நகரம், துபாய் மற்றும் அபுதாபி நாடுகளில் எதிர்வரும் 26 ஆம் திகதி முதலீட்டுக்காக உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தி வைக்கப்படும் என முதலீட்டு ஊக்குவிப்பு ராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதில் பிரித்தானிய முன்னாள் பிரதமர் டேவிட் கமரூன் கலந்துகொள்ள உள்ளதாகவும் துறைமுக நகரில் முதலீடுகளை செய்ய ஏற்கனவே 17 முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளனர் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அத்துடன் கொழும்பு துறைமுக நகரின் பெயர் கொழும்பு பொருளாதார நகரம் என்று பெயர் மாற்றம் செய்யவும் வாய்ப்புள்ளது.

எனினும் இது தொடர்பாக இதுவரை இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

புதிய சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் துறைமுக நகர திட்டத்தில் பெரும் மாற்றம் ஏற்படும்.

இதன் பின்னர் முதலீட்டுப் பணிகளை ஆரம்பிக்க முடியும்-என்றார். (அ)

# தேசிய கல்வியியல் கல்லூரி மாணவர் அனுமதி தாமதம்!

கொழும்பு, செப். 20

கல்வியியல் கல்லூரிகளில் மாணவர்களுக்கான அனுமதி ஒகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும் என குறிப்பிடப்பட்ட பின்னரும் அதற்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை.

அதன்படி கல்வியியல் கல்லூரிக்கு தகைமை பெற்றவர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை ஒகஸ்ட் 31 மாதம் திகதிக்கு முன்னரே நிறைவு செய்யுமாறு கல்வி அமைச்சின் செயலாளர், கல்வியியல் கல்லூரிகளின் பீடாதிபதிகளுக்கு அறிவுறுத்தியிருந்தார்.

இதற்கு முன்னர் பல தடவைகள் இவ்வாறு அறிவித்த போதிலும், கல்லூரி விரிவுரையாளர்கள் சில கோரிக்கைகளை கல்வி அமைச்சிடம் தெரிவித்து தொடர்ந்தும் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதில் முக்கியமாக சம்பள முரண்பாட்டை தீர்க்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கான 2019/2020 உயர்தரம் தோற்றியவர்களை கல்வியியல் கல்லூரிக்கான நேர்முக தேர்வு இவ்வாண்டு முதல் இரு மாதங்களில் இடம்பெற்றது.

இந்நிலையில் கல்வி அமைச்சின் அறிவித்தல்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இவ்வாறான காரணங்களால் கல்வியியல் கல்லூரிக்கு தெரிவாகிய மாணவர்கள் பல இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.

குறிப்பாக கல்வியியல் கல்லூரி படிப்பை முடித்து வரும் போது 25,26 வயதை தாண்டுவதோடு, மாணவர்களை பதிவு செய்வது தொடர்பாக முறையான அறிவித்தல்கள் இல்லாமையால் பலர் தனது வேலைகளை விட்டும், பலர் வேலைகளுக்கு செல்ல முடியாமல் வீட்டில் இருப்பதாலும் குடும்பத்தில் பாரிய பொருளாதார சிக்கல் நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மாணவர்களின் மன நிலை மற்றும் அவர்களின் வாழ்க்கையை எண்ணி மாணவர்களுக்கு ஒன்லைன் மூலமாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்வியியல் கல்லூரிக்கு தெரிவாகிய மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மின்சார சபை ஊழியர்களுக்கு போனஸ் வழங்கப்படமாட்டாது

கொழும்பு, செப். 20

இலங்கை மின்சார சபையின் ஊழியர்கள் எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு பயன்படுத்தப்படாத விடுமுறை நாட்களுக்கு எந்தவிதமான போனஸ் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்படமாட்டாது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

கடந்த 14ஆம் திகதி நடைபெற்ற இலங்கை போக்குவரத்துச் சபையின் 35 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் வேலைத்திட்டம் தொடர்பாகவும் அமைச்சர் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

எனினும் இந்த கலந்துரையாடல் வெற்றியளிக்கவில்லை என தொழிற்சங்க பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கை மின்சார சபையில் பணப்பற்றாக்குறை ஏற்பட்டது ஊழியர்கள் தவறினால் அல்ல, அதிகாரிகளின் நடவடிக்கையே காரணம் என தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இலங்கை மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலத்தை எதிர்வரும் 24ஆம் திகதி அமைச்சரவையின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கிடையில், உத்தேச மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் முன்னேற்றம், புதிய மின்சார சபை சட்டத்தின் வடிவம், மறுசீரமைப்பு செயல்முறைகள் தொடர்பான விதிமுறைகளை அமுல்படுத்துவதற்கான காலக்கெடு, மனிதவள கணக்காய்வு மற்றும் மனிதவள தணிக்கை போன்ற விடயங்கள் குறித்து அமைச்சர் காஞ்சன விஜேசேகர கலந்துரையாடியதாக மின்சக்தி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நிலந்த ஜயவர்தன எப்படி எமக்கு அறிவுறுத்தலை வழங்க முடியும்?

## லக்ஷ்மன் கிரியெல்ல சபையில் கேள்வி



கொழும்பு, செப். 20

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பந்தமாக உடனடியாக வழங்கு தாக்குதல் செய்யுமாறு ஜனாதிபதி ஆணைக்குழுவினால் உத்தரவிடப்பட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன, எப்படி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தலை வழங்க முடியும் என எதிர்க்கட்சியின் பிரதான கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவிடம் நேற்று கேள்வி எழுப்பினார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் இப்படியான பரிந்துரை வழங்கப்பட்டிருக்கும் போது அரசாங்கம் நிலந்த ஜயவர்தனவுக்கு பதவி உயர்வை வழங்கியது எனவும் கிரியெல்ல குறிப்பிட்டார்.

பாராளுமன்ற அவையின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்போது சபாநாயகரின் அனுமதியுடன் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிரான உடனடியாக வழக்கு தாக்கல் செய்யுமாறு ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனினும் அரசாங்கம் அவருக்கு பதவி உயர்வை வழங்கியது. அப்படியான ஒருவர் தற்போது எமக்கு ஆலோசனை வழங்க வருகிறார்-என்றார்.


இதற்கு பதிலளித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, எதிர்க்கட்சியின் பிரதான கொறடா, நாட்டுக்கு தவறான புரிதலை வழங்க முயற்சிக்கின்றார்.

லக்ஷ்மன் கிரியெல்ல கூறும் விடயத்தை, நிலந்த ஜயவர்தனவிடம் அந்த இடத்தில் கேட்க முடியும். அப்போது அதனைச் சரி செய்துக்கொள்ள முடியும். இவர்கள் ஆட்சியில் இருந்த போதே ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் நடந்தது-என்றார்.

இதனையடுத்து கருத்து வெளியிட்டுள்ள சபாநாயகர், நிலந்த ஜயவர்தன கலந்துகொள்ளும் கருத்தரங்கு தொடர்பாக அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்படும் என தெரிவித்தார். (அ)

# கஜேந்திரன் மீதான தாக்குதலுக்கு முறையான விசாரணை வேண்டும்

## சபாநாயகரிடம் செல்வம் எம்.பி. கோரிக்கை



கொழும்பு, செப். 20

திருகோணமலையில் வைத்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் முறையான விசாரணை அவசியம் என பாராளுமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று காலை ஆரம் பமான பாராளுமன்ற அமர்வின் போது உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்,

சக பாராளுமன்ற உறுப்பினரான உத்திக பிரேமரத்ன துப்பாக்கிச் சூட்டிற்கு ஆளாகி உயிர் தப்பியுள்ளதோடு, திருகோணமலையில் செல்வராசா கஜேந்திரன் தாக்கப்பட்டு உயிர் அச்சுறுத்தலை எதிர்கொண்ட நிலையில் இது தொடர்பாக முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்ட வேண்டும்-என்றார். (அ)

# அம்பாறை மாவட்டத்தில் கொட்டித் தீர்த்தது மழை!

## வெள்ளத்தால் சிரமங்களை எதிர்நோக்கும் மக்கள்

அம்பாறை, செப். 20

**அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, அக்கரைப்பற்று, நிந்தவூர், நாவிதன்வெளி, சம்மாந்துறை பிரதேச பகுதிகளில் வாழும் மக்கள் மழை வெள்ளம் காரணமாக சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.**

**மழை வெள்ளத்தின் காரணமாக இந்த மாவட்டத்தின் பெரிய நீலாவணை, பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, காரைதீவு, சம்மாந்துறை, அக்கரைப்பற்று பகுதிகளில் இப்பிரதேசத்தில் பல குடும்பங்கள் வெள்ளத்தினால் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளன.**

தற்போது அங்குள்ள மக்கள் வீடுகளுக்குள் மழை வெள்ளம் உட்புகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கு காரணம் மழை நீர் வழிந்தோடுவதற்குரிய முறையான வடிகால் இன்மையே முக்கிய காரணம் என்ற குற்றச்சாட்டும் மக்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசங்கள் ஒவ்வொரு வருடமும் மழையினாலும் அதனால் ஏற்படும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சில வேளை இம்மக்கள் இடம் பெயரும் நிலைமை ஏற்படுகிறது.

இப்பகுதிகளில் வசிக்கின்ற சில மக்களின் வாழ்வாதாரம் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு ஒழுங்கான வீடமைப்பு வசதிகளும் இல்லை.

ஒழுங்கான வீதி கிடையாது மின்சார வசதி இல்லை. நீர் வடிந்தோட ஒழுங்கான வடிகால்கள் இல்லை. சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்ல கஸ்டப்படுகின்றனர். தொழில் செய்வது சிரமமாக உள்ளது. இது தான்



அந்த மக்களின் நிலையாக உள்ளது.

கடந்த சில நாட்களாக பெய்து வரும் அடைமழை காரணமாக அப்பகுதியில் வசிக்கும் மக்களின் வீடுகளுக்குள் மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் அன்றாட உணவுகளை சமைத்து உண்ண முடியாத நிலையில் மக்கள் காணப்படுகின்றனர்.

தற்போது வெள்ள நீர் வடிந்தோடுவதற்காக சில முகத்துவாரங்கள் வெட்டப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் வெள்ள நீர் தேங்கி காணப்படுகின்ற நிலைமையே தொடர்கதையாகவுள்ளது.

(அ)



# ஒரே குடும்பத்தில் இருவர் வாகன விபத்தில் மரணம்!

மட்டக்களப்பு, செப். 20

வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் சந்திவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியில் வைத்து நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

காத்தான்குடிப் பகுதியில் இருந்து கட்டுநாயக்கா விமான நிலையம் நோக்கிச் சென்றவர்களே இவ் விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

வெளிநாட்டிலிருந்து நாட்டுக்கு வருகை தரும் குடும்ப உறுப்பினர்களை அழைத்துவரச் சென்றவர்களே இவ் விபத்தில் சிக்கியுள்ளனர்.

இவர்கள், வான் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்தபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்து மரம் ஒன்றில் மோதியதில் இருவரும் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் மேலும் கூறினர்.

இதில், காத்தான்குடியைச் சேர்ந்த 54 வயதுடைய முகம்மட் இப்றாகிம் முகம்மட் ஹூசைன் என்பவரும், அவரது 4 வயது பேரப்பிள்ளையான முகம்மட் நுபைல் ஹிபா செரீன் என்பவரும் மரணமடைந்துள்ளனர்.

இவ் விபத்தில், மரணமடைந்த நபரின் மனைவி பலத்த காயங்களுடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# அஸ்-ஸுஹறா பாடசாலைக்கு போட்டோப் பிரதி இயந்திரம்




அம்பாறை, செப். 20

அம்பாறை மாவட்டம் கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட அஸ் -ஸுஹறா பாடசாலைக்கான புதிய நவீன போட்டோ கொப்பி இயந்திரம் றஹ்மத் பவுண்டேசன் அமைப்பினால் வழங்கப்பட்டது.

பாடசாலைக்கு புதிய போட்டோ கொப்பி இயந்திரம் தேவை குறித்த பாடசாலை அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதிய்யாவின் வேண்டுகோளுக்கமைவாக றஹ்மத் பவுண்டேசன் அமைப்பின் ஆயுட்கால தலைவர் மாநகர முன்னாள் பிரதிமேயர் றஹ்மத் மன்சூரினால் கடந்த திங்கட்கிழமை வைபவ ரீதியாக விசேட காலை ஆராதனையில் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது கோட்டமட்ட விளையாட்டுப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற தரம் 03ஆண்கள், பெண்கள், தரம் 04 ஆண்கள் பிரதம அதிதியினால் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

(அ)

# உருகாமம் கிராமத்தில் யானைகள் அட்டகாசம்

## உடைமைகள் சேதம்





மட்டக்களப்பு, செப். 20

மட்டக்களப்பு சொங்கலடி பிரதேச செயலகப்பிரிவிலுள்ள உருகாமம் கிராமத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் காரணமாக வீடுகள் தோட்டங்கள் மின்சாரக் கம்பங்களும் சேதமடைந்துள்ளன.

நேற்று முன் தினம் அதிகாலை சுமார் 1.30 மணியளவில் காட்டு யானைகள் ஊருக்குள் நுழைந்து காணிகளுக்குள் உட்பிரவேசித்ததாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

குறித்த காட்டு யானை பிரச்னை காரணமாக அப்பகுதி மக்கள் பல அசௌகாரியங்களை எதிர்நோக்குவதாகவும் யானைகளின் அட்டகாசம் தொடர்பாக அதிகாரியிடம் பல தடவைகள் எடுத்துக் கூறியும் எதுவும் நடைபெறவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

(அ)

# கஞ்சிகுடிச்சாறில் கரடி தாக்கி ஒருவர் படுகாயம்



அம்பாறை, செப். 20

அம்பாறை திருக்கோவில் பொலிஸ்ப் பிரிவுகுட்பட்ட கஞ்சிகுடியாறு காட்டுப் பிரதேசத்தில் கரடி தாக்கியதில் ஆண் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் திங்கட்கிழமை விறகு சேகரிப்பதற்காக காட்டுக்குள் சென்றிருந்தவேளை கரடி தாக்கியதால் அவருக்கு முகம், கண்கள், கைகள் போன்றவற்றில் பாரிய காயங்கள் ஏற்பட்டன.

கரடியின் தாக்குதலுக்கு உள்ளானவர் திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்று, அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக அம்பாறை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இவ்வாறு கரடி தாக்குதலுக்கு உள்ளானவர் திருக்கோவில் 04 காயத்திரி கிராமத்தினைச் சேர்ந்த 40 வயதுடைய வடிவேல் தனராஜ் என அடையாளம் காணப்பட்டார்.

ஈழநாடு



# பாப்பரசர், சார்ள்ஸ் வருகை பிரான்ஸில் தீவிர பாதுகாப்பு

## இந்த வாரத்தில் பல முக்கிய நிகழ்வுகள்

பாரிஸ், செப். 20

**பிரிட்டிஷ் மன்னர் சார்ள்ஸ் தனது துணைவியார் ராணி கமீலா சகிதம் மூன்று நாள் அரசு முறைப் பயணம் மேற்கொண்டு எதிர்வரும் புதன்கிழமை பிரான்ஸ் வருகிறார். பாரிஸிலும் போர்தோ நகரிலும் பல்வேறு நிகழ்வுகளில் அவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். அதேசமயம் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் நடத்தவுள்ள பிரமாண்டமான திருப்பலி ஆராதனை மார்செய் நகரத்தில் வெலோட்ரோம் மைதானத்தில் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அந்தக் கத்தோலிக்க மத நிகழ்வில் அதிபர் மக்ரோன் - பிரிஜித் தம்பதிகளும் பங்கேற்கின்றனர்.**



இந்த முக்கிய நிகழ்வுகளை ஒட்டி ஆயிரக்கணக்கான பொலீஸார் மற்றும் ஜொந்தாம் படையினர் வழமைக்கு மாறான விசேட பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடவுள்ளனர்.

பாப்பரசரது வருகை, மன்னரது விஜயம் ஆகியவற்றை முன்னிட்டு அவர்கள் பங்கேற்கின்ற நிகழ்வுகள் நடைபெறும் சகல பகுதிகளிலும் பலத்த பொலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன. மன்னர் சார்ள்ஸ் பாரிஸ் நகரில் பயணிக்கும் இடங்களில் பொதுமக்களையும் நெருங்கிச் சந்திக்க உள்ளதால் நகரில் பொலீஸ் கண்காணிப்புக்கள் தீவிரமாக்கப்பட்டுள்ளன. இவ்விரு விஜயங்களும் ரக்பி உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு மத்தியில் இடம்பெறுகின்றன. ஏற்கனவே இந்தப் போட்டிகளை ஒட்டிப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது. அதேசமயம் எதிர்வரும் சனிக்கிழமை பாரிஸிலும் வேறு சில நகரங்களிலும் பொலீஸ் வன்முறைகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும் ஏற்பாடாகி உள்ளன.

பதற்றம் நிறைந்த இந்த வாரத்தில் குழப்பங்கள் மற்றும் வன்முறைகள் நேர்ந்துவிடாமல் இருப்பதை உறுதி செய்வதில் அரசு உயர் மட்டம் கவனம் செலுத்தியுள்ளது.

சார்ள்ஸ் மன்னராகப் பதவியேற்ற பின்னர் பிரான்ஸுக்கு மேற்கொள்கின்ற முதலாவது விஜயம் இதுவாகும். விமானம் மூலம் புதன் கிழமை பாரிஸை வந்தடையவுள்ள மன்னரும் ராணியும் வெள்ளியன்று ரயில் மூலம் இங்கிருந்து போர்தோ செல்கின்றனர்.

கடந்த மார்ச்சில் மன்னரது விஜயம் ஏற்பாடாகியிருந்த சமயத்தில் பாரிஸில் ஓய்வூதியச் சட்டத் திருத்தத்துக்கு எதிரான பெரும் கலவரங்கள் வெடித்திருந்தன. அதனால் அவரது வருகை ஒத்திவைக்கப்பட்டமை தெரிந்ததே.

(அ)



# ஈரான் மீது பொருளாதார,அணு ஆயுத தடைகளை விதித்துள்ளது பிரான்ஸ்!

பாரிஸ், செப். 19

ஈரான் மீது பிரான்ஸ் பொருளாதார மற்றும் அணு ஆயுதத் தடைகளை விதித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்யாவிற்கு ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை விற்பனை செய்வதை தடுக்கும் முயற்சியின் ஒரு அங்கமாக இந்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்திற்கு ஒப்புக்கொண்டது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஈரானுக்கு ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை வாங்கவோ, விற்கவோ அல்லது மாற்றவோ அனுமதி மறுக்கப்பட்டது.

இருப்பினும், யுரேனியத்தை செறிவூட்டி சேமித்து வைப்பதன் மூலம் ஈரான் ஒப்பந்தத்தை மீறியுள்ளதாக ஐரோப்பிய நாடுகள் நம்புகின்றன.

அத்துடன், தடைகள் விதிக்கப்பட்ட போதும் ஈரானில் தயாரிக்கப்பட்ட பல ட்ரோன்கள் உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவால் பயன்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஈரான் ஒப்பந்தத்துடன் முழுமையாக இனங்கும் வரை தடைகள் அமுலில் இருக்குமென பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

(அ)

# சோமாலியாவுக்கான உதவியை நிறுத்தியது ஐரோப்பிய ஒன்றியம்

பிரஸ்ஸல்ஸ், செப். 20

உலக உணவுத் திட்டத்தின் கீழ் சோமாலியாவுக்கான உதவியை, ஐரோப்பிய ஒன்றியம் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

கடுமையான பஞ்சத்தை தவிர்க்கும் வகையில் உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்பட்ட உதவிகளை, சோமாலிய அதிகாரிகள் மோசடி செய்துள்ளமை ஐக்கிய நாடுகளின் விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து சோமாலியாவுக்கான உதவியினை ஐரோப்பிய ஒன்றியம் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் சிரேஸ்ட அதிகாரிகள் இருவர் தெரிவித்துள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி சேவை தகவல் வெளியிட்டுள்ளது. (அ)

# நோபல் பரிசின் ரொக்கத் தொகை 11 மில்லியன் குரோனராக உயர்வு



ஒஸ்லோ, செப். 20

நோபல் பரிசு வென்றவர்களுக்கு வழங்கப்படும் ரொக்கத் தொகை 1 மில்லியன் குரோனரில் இருந்து 11 மில்லியன் குரோனராக உயர்த்தப்படும் என நோபல் அறக்கட்டளை அறிவித்துள்ளது.

சுவீடனின் நாணயமான குரோனரின் பெறுமதி குறைந்தமையே இதற்கு காரணம் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்க டொலர் மற்றும் யூரோவுக்கு நிகராக குரோனரின் பெறுமதி குறைந்துள்ளமை இதுவே முதல் முறையாகும்.

கடந்த ஓகஸ்ட் மாதம் சுவீடனில் பணவீக்கம் 7.2 சதவீதமாக இருந்தது.

கடந்த 1901 ஆம்ஆண்டு நோபல் பரிசுகள் முதன் முதலில் வழங்கப்பட்டபோது, ஒவ்வொரு பிரிவிற்கும் 1.50 லட்சம் குரோனர்கள் வழங்கப்பட்டன.


அதன் பின்னர் நோபல் அறக்கட்டளை படிப்படியாக இந்தத் தொகையை அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டுக்கான நோபல் வெற்றியாளர்கள் ஒக்டோபர் மாதம் அறிவிக்கப்படுவார்கள் என நோபல் அறக்கட்டளை தெரிவித்துள்ளது. (அ)

# தாய்வான் வான் பரப்பில் பறந்த சீனாவின் 20 போர் விமானங்கள்

பீஜிங், செப். 20

தாய்வானின் வான்பரப்பு எல்லையை சீனா மீண்டும் மீறி செயற்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தாய்வான் வான்பரப்பில் சீனாவின் 20 போர் விமானங்கள் பறந்தன. சதித்திட்டத்துடன் சீனாவின் போர் விமானங்கள் தாய்வான் நீரிணையின் இடைநிலைக் கோட்டைத் தாண்டியதாக தைபே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



சீனாவில் இருந்து சுமார் 20 போர் விமானங்கள் இரு நாடுகளையும் பிரிக்கும் இடைக்கோட்டைக் கடந்து, தமது நாட்டிற்கும் சீனாவுக்கும் இடையிலான நீரிணையின் தென்கிழக்கு-தென்மேற்கு வான் பாதுகாப்பு பிராந்தியத்திற்குள் நுழைந்ததாக தாய்வான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் தனது நீண்ட கால திட்டங்களின் ஒரு பகுதியாக இவ்வாறான பயிற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும், தமது சொந்த ரோந்து விமானங்கள் மற்றும் கப்பல்கள் மூலம் பிராந்தியத்தின் நிலைமையை கண்காணித்து வருவதாகவும் சீனா தெரிவித்துள்ளது.

தாய்வான் ஜனநாயகக் கட்சி தாய்வானை தனி ஜனநாயக நாடாக பிரகடனப்படுத்தியதை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்பட்டது. அது இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ மற்றும் இராஜதந்திர அழுத்தங்களை அதிகரிக்க செய்தது.

அமெரிக்கா மற்றும் கனடாவின் இருந்து இரண்டு கப்பல்கள் தாய்வான் நீரிணை இந்த மாதம் பயணித்து, தாய்வானுக்கு ஆதரவாக நங்கூரமிட முயற்சித்த போது சீனப் படையினரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த வாரம் தமது நாட்டை சுற்றி 68 விமானங்கள் பறந்ததை 10 போர்க்கப்பல்கள் கண்டறிந்ததாக தாய்வான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சில விமானங்கள் மற்றும் போர்க்கப்பல்கள் சீனாவின் ஷான்டாங் விமானம் தாங்கி கப்பலில் இருந்து மேற்கு பசிபிக் பகுதிக்கு கடல் மற்றும் வான்வழி பயிற்சிக்காக பறந்ததாக தாய்வான் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

எனினும் இந்த ஊடுருவல் குறித்து சீனா இதுவரை எந்த உத்தியோகபூர்வ அறிவிப்பையும் வெளியிடவில்லை.

கடந்த ஏப்ரல் மாதத்தில், சீனா இப்படியான இராணுவ சூழ்ச்சிகளை மேற்கொண்ட போது, தாய்வான் ஜனாதிபதி சாய் இங்-வென் கலிபோர்னியாவுக்குச் சென்று, இந்த விடயத்தை அமெரிக்க செனட் சபை சபாநாயகர் கெவின் மெக்கார்த்தியின் கவனத்திற்கு கொண்டு வந்தார். (அ)

# ஐக்கிய நாடுகள் சபை மீதுள்ள நம்பிக்கை குறைந்து வருகிறது!

## கூறுகிறார் செல்வம் அடைக்கலநாதன்

மன்னார், செப். 20

**“ஐக்கிய நாடுகள் சபை மீதான நம்பிக்கை தமிழ் மக்களுக்கு குறைந்து வருகின்றது” என ரெலோ தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

மன்னாரில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய நாடுகள் சபை வலுவான அல்லது ஆக்கபூர்வமான தீர்மானங்களை கொண்டு வந்து இலங்கை அரசாங்கத்தின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு மனித உரிமை மீறல்களுடன் சம்மந்தப்படவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்பதும் எமது மக்களின் கோரிக்கையாகவும் ஆவலாகவும் உள்ளது. ஆனாலும் ஐ.நா. சபையிலே தீர்மானங்கள் வருகின்ற போதேல்லாம் இலங்கை அரசாங்கம் ஐ.நா சபையை ஏமாற்றுகின்ற வகையிலே காலங்கள் கொடுக்கப்படாலும் அவற்றை நடை முறைப்படுத்தாது தொடர்ந்தும் கால



நீடிப்பை பெறுவதற்கான உத்திகளை கையாண்டு வருகின்றது.

அதற்கு ஏற்ற வகையில் ஐ.நா சபையும் அவர்களுக்கு வாய்பை வழங்கி வருகின்றது. இதனால் தமிழ் மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் மீதான நம்பிக்கை குறைந்து வருகின்றது-என்றார்.

(அ)

# நாடுகளிடையே அதிகாரச் சண்டைகளில் ஈடுபடுவதற்கு இலங்கை விரும்பவில்லை!

## நியூயோர்க்கில் கூறினார் ஜனாதிபதி ரணில்


கொழும்பு, செப். 20

முக்கிய நாடுகளுக்கிடையிலான அதிகாரச் சண்டைகளில் ஈடுபடுவதற்கு இலங்கை விரும்பவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியப் பெருங்கடலில் தனது செல்வாக்கை நிலைநிறுத்த பெரும் வல்லரசுகள் முயற்சித்து வரும் நிலையில் அவர் இதனை கூறினார்.

இந்து சமுத்திரத்தில் இடம்பெறும் எந்தவொரு இராணுவ ஒத்திகைக்கும் இலங்கை ஆதரவளிக்காது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நியூயோர்க்கில் நடைபெற்ற இந்திய-பசிபிக் தீவுகள் உரையாடல் நிகழ்ச்சியில் சிறப்புரை ஆற்றியபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை



கூறினார்.

இந்தியப் பெருங்கடலில் உள்ள பல நாடுகள், நல்வாழ்வு மற்றும் வளர்ச்சியை சமரசம் செய்யும் பெரும் சக்திகளுக்கு இடையேயான சண்டைகளுக்கு இழுக்கப்படுகின்றன என கூறியுள்ளார்.

(அ)

# ஆசிரியரிடம் 75 லட்சம் ரூபாய் மோசடி!

யாழ்ப்பாணம், செப். 20

அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஆசிரியர் ஒருவரிடம் 75 இலட்ச ரூபாய் பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை பகுதியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரே இவ்வாறு போலி முகவரால் ஏமாற்றப்பட்டுள்ளார்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட நபர் இது குறித்து யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் கொழும்பைச் சேர்ந்த குறித்த நபரைக் கைது செய்துள்ளனர்.

இதனையடுத்த நேற்று முன்தினம் குறித்த நபரை நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர்படுத்தியுள்ள நிலையில் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை குறித்த நபரினால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மேலும் சிலரும் ஏமாற்றப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# நாட்டுக்கு 2 ஆயிரம் தடுப்பூசிகள் அடுத்த வாரம் கிடைக்கப் பெறும்

கொழும்பு, செப். 20

மஞ்சள் காமாலை நோய்க்கான 2 ஆயிரம் தடுப்பூசிகள் அடுத்த வாரம் நாட்டுக்கு கிடைக்கப்பெறும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளரான விசேட வைத்தியர் விஜேசூரிய தெரிவித்தார்.

மஞ்சள் காமாலை நோய்க்கான தடுப்பூசிகளின் தட்டுப்பாடு காரணமாக, கடந்த காலத்தில் சுகாதார அமைச்சு மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையிலேயே, யுனிசெப் அமைப்பின் உதவியுடன், விரைவில் குறித்த தடுப்பூசிகள் நாட்டுக்கு கிடைக்கப்பெறும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்தியர் விஜேசூரிய குறிப்பிட்டார்.

(அ)

# டிஜிற்றல் மயமாக்கும் திட்டத்தில் வெளிப்படைத் தன்மை அவசியம்

## உலக வங்கித் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, செப். 20

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் திட்டத்திற்கு முழுமையான ஆதரவை வழங்குவோம் என உலக வங்கி அறிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டங்களை முன்னோக்கிக் கொண்டுச் சென்றால் இலங்கை எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடியும் என் உலக வங்கியின் தலைவர் அஜய் பங்கா கூறியுள்ளார்.

இலங்கையின் டிஜிற்றல் மயமாக்கல், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மற்றும் கல்வித்துறை ஊக்குவிப்புக்கும் ஆதரவு வழங்குவோம் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

ஐ.நா. சபையின் 78 ஆவது அமர்வில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதிக்கும் உலக வங்கியின் தலைவர் அஜய் பங்காவுக்கும் இடையில் நேற்று முன் தினம் இந்த



சந்திப்பு இடம்பெற்றது.

கடந்த இரண்டு வருடங்களில் இலங்கை எதிர்கொண்ட கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு உலக வங்கி வழங்கிய ஆதரவுக்கு ஜனாதிபதி உலக வங்கியின் தலைவருக்கு நன்றி தெரிவித்தார்.

இதேநேரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பை உலக வங்கியின் தலைவர் ஏற்றுக்கொண்டார்.

மேலும் அமைச்சுகள் மற்றும் அரச நிறுவனங்களை டிஜிற்றல் மயமாக்கும் வேலைத்திட்டத்தில் வெளிப்படைத் தன்மை அவசியம் என்றும் உலக வங்கியின் தலைவர் தெரிவித்தார்.

# 2,135 இ.போ.ச. பஸ்கள் சேவையிலிருந்து நீக்கம்!

கொழும்பு, செப். 20

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான 7298 பஸ்களில் 2135 பஸ்கள் சேவையில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

மேலும், நாடு முழுவதிலும் உள்ள நகரங்கள், புறநகர்ப் பகுதிகள், கிராமப்புற வீதிகள் மற்றும் பயணிகள் போக்குவரத்து சேவைகளை உள்ளடக்குவதற்கு 7339 பேருந்துகள் தேவைப்படுவதாக இலங்கை போக்குவரத்

ප්‍රවාහන හා මහාමාර්ග අමාත්‍යාංශය
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
MINISTRY OF TRANSPORT AND HIGHWAYS

துச் சபை குறிப்பிட்டுள்ளது.

சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் இல்லாத காரணத்தினால் பயணிகள் போக்குவரத்துச் சேவையை உரிய முறையில் பேண முடியாதுள்ளதாகவும் போக்குவரத்துச் சபையின் எதிர்காலத் திட்டங்களுக்கு அமைய 1500 புதிய பஸ்கள் தேவைப்படுவதாகவும் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

123 சொகுசு பஸ்கள் தங்களிடம் இருப்பதாகவும், ஆனால் இன்னும் 100 சொகுசு பஸ்கள் தேவைப்படுவதாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

325 பஸ்கள் குத்தகை அல்லது கடன் பத்திரத்தில் எடுக்கப்பட்டுள்ளதாகவும், ஐந்து கோடியே எழுபத்தொரு லட்சத்து ஐம்பத்தேழாயிரம் ரூபா (57,157,000) மாதாந்தம் தவணை முறையில் செலுத்தவேண்டும் என்றும் அது கூறியுள்ளது. (அ)

# 45 இலட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்டுகளுடன் இருவர் கைது!

கொழும்பு, செப். 20

சட்டவிரோதமாக வெளிநாட்டு சிகரெட்டுக்களை இலங்கைக்கு கொண்டுவந்த இரு வர்த்தகர்களை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து சுமார் 45 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியாக 45, 400 வெளிநாட்டு சிகரெட்டுக்களை சுங்க அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் யட்டியாந்தோட்டையைச் சேர்ந்த பெண்ணும் மற்றையவர் கல்முனையைச் சேர்ந்த ஆணும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் அடிக்கடி விமானம் மூலம் வெளிநாட்டில் இருந்து பொருட்களைக் கொண்டு வந்து இலங்கையில் விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இருவரும் டுபாயிலிருந்து கல்ப் எயார் விமானத்தில் நேற்று முன் தினம் காலை காலை 10.20 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டு, ஆணுக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் பெண் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

(அ)

## பாராளுமன்றில்...

நீண்ட தெளிவுபடுத்தல் நேற்று வழங்கப் பட்டது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச் சரின் தலைமையில், பொலிஸ் பயங்கர வாத தடுப்பு பிரிவின் பிரதானி இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்க ளுக்கு விடயங்களை முன்வைத்துள்ள துடன், ஆளும் - எதிர்க்கட்சி உறுப்பி னர்கள் இதில் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## கொழும்பில்...

ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்த நினைவேந்தல் நிகழ்வை குழப்பும் வகையில் "முது கெலும்பு இருப்பவர்கள் ஆயத்தமாகுங் கள். கொழும்புக்கு வருகை தரும் புலிக ளுக்கு எதிராக தாக்குதல் நடத்துவோம்" என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதிவு கள் அண்மையில் வெளியிடப்பட் டன.

இதைத் தொடர்ந்து பொலிஸார் திலீபன் நினைவேந்தலை நடத்தத் தடை விதிக்குமாறு கோரி கோட்டை, மாளி காகந்தை நீதிவான் நீதிமன்றங்களில் தாக்கல் செய்த மனுக்களை தாக்கல் செய்தனர். இதை ஏற்று இரு நீதிமன் றங்களும் தடை உத்தரவை விதித்தன. (ஐ)

## நான்கு...

வசிக்கும் ஒருவர் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அதிகம் செலவு செய்ய வேண்டியுள் ளது. இந்தத் தொகை ரூ. 17,352 ஆகும்.

மொனராகலை மாவட்டத்தில் மிகக் குறைந்த வாழ்க்கைச் செலவு பதிவாகியுள் ளதுடன் அதன் பெறுமதி ரூ. 15,278 ஆகும்.

ஜூலை 2023 இல் மேற் கொண்ட புள்ளிவிவரத்தின்படி, நான்கு பேர் கொண்ட குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவை யான குறைந்தபட்ச மாத செலவு ரூ. 63,912 ஆகும். (ஐ)

## படகு...

ஒருவர் உயிரிழந்தார். மற்றவர் காப் பாற்றப்பட்டுள்ளார்.

இதே இடத்தை சேர்ந்த 19 வயது டைய சுதேந்திரன் ஜனுஷன் என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவரா வார்.

பிரேத பரிசோதனைக்காக குறித்த இளைஞனின் சடலம் விசாரணையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது மருத்துவமனை யில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை குச்சவெளி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

## இந்தியாவுடனோ...

பிராந்தியத்தின் அனைத்து நாடுகளும் அர்ப்பணிக்க வேண்டும் - என்றும் அவர் இதன்போது கூறினார்.

ஐ. நா. கூட்டத் தொடருடன் இணைந்ததாக நடைபெற்ற கடல்சார் நாடுகளுக்கான 3ஆவது இந்து - பசுபிக் தீவு நாடுகளுக்கு இடையிலான பேச்சில் பங்கேற்று உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

கார்னகி எண்டோவ்மென்ட் மற்றும் சசகாவா மன்றம் ஆகியவற்றால் ஏற் பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கலந் துரையாடலில் ஜனாதிபதி மேலும் கூறியவை வருமாறு,

பிரதான உலக வல்லரசுகளுக்கு இடையிலான போட்டியில் தலையிடு வதற்கு, இந்து சமுத்திர மற்றும் தென் பசுபிக் பிராந்தியத்தின் தீவு நாடுகள் விரும்பவில்லை. இந்த நாடுகள் தமது சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாடு உட்பட அவர்களின் முதன்மையான விடயங் களில் கவனம் செலுத்தி, தமது நாடுக ளின் இறைமை மற்றும் சுதந்திரத்தைப் பேண முயற்சிக்கின்றன.

இலங்கை அரசாங்கம் இந்தியாவு டனோ அல்லது சீனாவுடனோ கூட் டணி அமைக்காது. எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கையின் நலன்களை முன்னிலைப்படுத்தி நிற்கும். அதே போன்று, பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளும் தமது நாடுகளின் இறைமைக் காக அர்ப்பணிப்புடன் செயல்படுவதா கவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற் றும் அவுஸ்திரேலியா உள்ளடக்கிய குவாட் நாடுகள் மற்றும் சீனாவின் இலக்குகளுடன் தொடர்பில்லாத இந்து சமுத்திரத்தின் மற்றும் தென் பசுபிக் பிராந்தியத்தின் தீவு நாடுகள் தமது சொந்த முன்னுரிமைகளைக் கொண்டி ருக்கின்றன. அவற்றை மதிக்கத் தயாராக இருக்கும் எந்தவொரு தரப்பினருடனும் ஒத்துழைப்பை கட்டியெழுப்ப இலங் கையும் செயல்பட்டு வருவதாக ஜனாதி பதி குறிப்பிட்டார். சீனாவின் எழுச்சியா னது எபெக் மற்றும் ஆசியான் போன்ற பிராந்திய கட்டமைப்புக்குள்ளேயே நடந்ததாகவும் அதனை பல நாடுகள் ஏற்றுக்கொள்வதாகவும் கூறினார்.

அண்மைக் காலமாக இந்தக் கட்ட மைப்புக்கு அப்பால் மாபெரும் வல்லர சுப் போட்டி விரிவடைந்து வருவதால் உறுப்பு நாடுகள் மத்தியில் கவலை தோன்றியுள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

தெற்கு பசுபிக் சமுத்திரம் மற்றும் இந்து சமுத்திரம் ஆகியவை, பெரும் மூலோபாய மதிப்பைக் கொண்டிருப் பதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தெற்கு பசுபிக் பிராந்தியம் அமெரிக்க கடற்படைக்கு இன்றியமையாத கேந்திர மையமாகும் என்றும், இரண்டாம் உல கப் போர் காலத்தின் போது இந்து சமுத் திரம் முக்கிய பங்காற்றியது என்றும் தெரிவித்தார்.

இந்து சமுத்திரத்தில் இலங்கையின் முக்கியத்துவத்தை இதன்போது விளக்கு வதற்காக, வின்ஸ்டன் சர்ச்சிலின் அறிக் கையை மேற்கோள் காட்டிய ஜனாதி பதி, "இலங்கையை கைப்பற்றுவது என்பது இந்து சமுத்திரத்தில் அதிகா ரத்தை இழப்பதாகும்" என்று குறிப் பிட்டார்.

இந்து - பசுபிக் பிராந்தியத்தின் முக்கியத்துவம், குறிப்பாக சீனாவின் சவால்களால் எடுத்துக்காட்டப்படுவ தாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இது பிராந்திய இயக்கம் மற்றும் ஒத்து ழைப்பை மீள் மதிப்பீடு செய்ய தூண்டி யுள்ளது என்றும் தெரிவித்தார்.

ஐரோப்பிய சக்திகள் மற்றும் நேட்டோவை தொடர்புபடுத்துவதற் காக ஜி-7 குழு எடுக்கும் முயற்சிக்கு எதிர்ப்பு எழுந்ததுடன், பிரான்ஸ் மட் டுமே அதற்கு ஆதரவளித்தது என்றும், இந்த சம்பவம் இந்து சமுத்திர ரிம் சங் கத்தின் விதிகளை மீறுவதாகக் கருதப் படுகிறது.

தீவு நாடுகள் தொடர்பிலான பாது காப்பு உரையாடல்களை ஏற்றுக் கொள்ள முடியும் என்றாலும், அந்த நாடுகளின் உள்ளக விவகாரங்களில் தலையிடுவது பொருத்தமானதல்ல என ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

இலங்கை உட்பட பல தீவு நாடுகள் இந்து-பசுபிக் பிராந்தியம் தொடர்பில் உயர்மட்ட கலந்துரையாடல்களில் ஈடுபடவில்லை என குறிப்பிட்ட ஜனாதி பதி, அமெரிக்கா மாலைதீவில் தூதரக மொன்றைத் திறப்பது போன்ற அண் மைக் கால முன்னேற்றங்கள் ஏற்பட் டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஆசியான் அமைப்பின் தலையீடு, ரஷ்ய-உக்ரைன் போர் மற்றும் பிரிக்ஸ் பிளஸ் உருவாக்கம் ஆகியவற்றின் காரண மாக இந்து சமுத்திரத்தில் அதிகார சமநிலை உருவாகி வருவதாகக் குறிப் பிட்ட ஜனாதிபதி, இந்த மாறும் பூகோள நோக்கு, தீவு நாடுகளின் சுதந்தி ரத்தைப் பேணுவதற்கு ஆதரவளிப்பது டன், மேலும் இந்து சமுத்திர ரிம் சங்கம், ஆசியான் மற்றும் பிரிக்ஸ் பிளஸ் ஆகிய அமைப்புகளுக்கு இடையே வலுவான ஒத்துழைப்பைப் பேண வேண்டும் என் றும் சொன்னார். (ஐ)

# மிருசுவிலில் வெடிபொருள் மீட்பு

யாழ்ப்பாணம், செப். 20

தென்மராட்சி மிருசுவில் வெடி பொருட்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

நேற்று செவ்வாய்க்கிழமை மிருசுவில் பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றிலேயே இந்த வெடி பொருட்கள் மீட்கப்பட்டன.

காணியை உரிமையாளர் துப்புரவு செய்யும்போது குறித்த வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு, இராணுவ புல னாய்வு பிரிவினருக்கு தகவல் வழங் கப்பட்டது. இதையடுத்தே அங்கிருந்து வெடி பொருட்கள் மீட்கப்பட்டன. (ஐ)

## 75துப்பாக்கி...

இந்த வருடத்தின் முதல் சில மாதங் களில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந் தேக நபர்கள் பலர் கைது செய்யப்பட் டுள்ளனர். துப்பாக்கிச் சூட்டுக்கு பயன் படுத்தப்பட்ட வாகனங்களையும் பொலி ஸார் கைப்பற்றியுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## 25ஆம் திகதி...

ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் தற்போது டெங்கு நோய் பூரண கட்டுப்பாட்டில் இருக்கின் றது. ஆனால், தற்போது ஆரம்பித்தி ருக்கின்ற வடக்கு - கிழக்கு பருவப் பேச்சு மழைக்குப் பின்னர் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்க லாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுவாக யாழ்ப்பாணம் மாவட் டத்தில் வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பித்த பின்னர் ஒக்ரோபர், நவம்பர் டிசெம்பர், ஜனவரி, பெப்ரவரி ஆகிய ஐந்து மாதங்களில் பொதுவாக டெங்கு நோயின் பரவல் அதிகமாக இருக்கும்.

இந்த வருடத்தைப் பொறுத்தவரை யில் இன்றுவரையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஆயிரத்து 836 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு இருக் கின்றார்கள். இதில் ஓர் இறப்பும் ஏற் பட்டிருக்கின்றது. இந்த வருடத்தில் ஜன வரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய நான்கு மாதங்களில் அதிகமான நோயா ளர்கள் இனங்காணப்பட்டனர். பின்னர் ஜூன், ஜூலை, ஒகஸ்ட் செப்ரெம்பர் மாதங்களில் ஏறத்தாழ 120, 130 நோயா ளர்கள்தான் இனங்காணப்பட் டனர். தற் போதைய சூழ்நிலையில் டெங்கு நோய் இங்கு கட்டுப்பாட்டில் இருக்கின்றது.

கடந்த வருடம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3 ஆயிரத்து 460 நோயா ளர்கள் இனங்காணப்பட்டனர். 10 இறப்பு களும் நிகழ்ந்தன. கடந்த வருடத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் குறைவாகவே காணப் படுகிறது.

வடக்கு, கிழக்கில் பருவப்பெயர்ச்சி மழை ஆரம்பித்துள்ளதால் டெங்கு நோய் பரவலை யாழ்ப்பாணத்தில் கட்டுப்படுத்துவதற்காக எதிர்வரும் 25ஆம் திகதி முதல் இரண்டு வாரங் களை நுளம்பு கட்டுப்பாட்டு வாரமாக பிரடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வாரத்தில் பிரதேச மட்ட டெங்கு தடுப்பு செயலணி கூட்டங்கள் பிரதேச செயலாளர்கள் தலைமையில் நடைபெறும். இதன்போது ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் எவ்வாறு இந்த டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக் கைகளை முன்னெடுப்பது என்பது பற்றி தீர்மானிக்கப்படும். இதற்கு அடுத்த கட்டமாக இந்த வாரத்திலே கிராமிய மட்ட டெங்கு தடுப்பு செயலணி கூட் டங்கள் நடைபெற்று கிராம மட்டத்தில் எவ்வாறு இதனை கட்டுப்படுத்துவது என்பது பற்றி தீர்மானிக்கப்படும்.

இந்த இரண்டு வாரத்திலும் பொது மக்கள் இந்த நுளம்பு உற்பத்தியாகின்ற இடங்களை சிரமதானத்தின் மூலம் சுத்திகரிக்க வேண்டுமென எதிர்பார்க் கின்றோம் - என்றார். (ஐ)

# பிரிட்டன் முன்னாள் பிரதமர் இலங்கை வருகின்றார்!

கொழும்பு, செப். 20

எதிர்வரும் 26 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை டுபாய், அபுதாபி நாடு களின் முதலீட்டாளர்களுக்காக கொழும்பு துறைமுக நகரம் உத்தி யோகப்பூர்வமாக அறிமுகப்படுத்தப் படும் நிகழ்வில் விசேட அதிதியாக பிரிட்டன் முன்னாள் பிரதமர் டேவிட் கெமரூன் கலந்து கொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது,

அத்துடன் கொழும்பு துறைமுக நகரத்தின் பெயரை "கொழும்பு நிதி நகரம் "என்று மாற்றியமைப்பதற்கும் ஆலோசிக்கப்படுவதாக பதில் முத லீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். (ஐ)

## தியாகி...

பயணம் கடந்த 15ஆம் திகதி ஆரம்ப மானது. பொத்துவிலில் ஆரம்பித்த இந்த ஊர்தி பயணம் திருகோணமலை யில் வலம் வந்த போது பெரும்பான்மை யினத்தை சேர்ந்த குழு ஒன்றால் தாக்கப் பட்டது.

முதலில் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி புதுக்குடியிருப்பு சந் தியை அடைந்து தொடர்ந்து பயணித்து முல்லைத்தீவை அடைந்தது. தொடர்ந்து, இந்த நினைவூர்தி இன்று வவுனியாவை சென்றடையவுள்ளது.

இதேவேளை, திலீபனின் நினைவூர்தி வவுனியாவில் பயணிக்க தடை விதிக்கு மாறு பொலிஸார் நீதிமன்றைக் கோரிய நிலையில் குழப்பம் ஏற்படுத்தாத வகை யில் பாதுகாப்பு அளிக்குமாறு நீதிமன் றம் உத்தரவிட்டது என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

## சஹ்ரானுக்கு...

தாக்குதலை ஒருங்கிணைக்கும் திறன் அவரிடம் காணப்படவில்லை. விடுதலைப் புலிகள் கூட அதனை செய்யவில்லை.

சஹ்ரான் ஹாசிம் முறையான கல்வியறிவற்ற ஒருவர். அவருக்கு அவ்வாறான ஒருங்கிணைந்த தாக்குதலை மேற்கொள்வதற்கான திறமையிருந்திருக் காது. அவருக்கு மேல் யாரோ இருந் தார்கள் - மிகவும் திறமையும் பயிற்சியும் அனுபவமும் மிக்க ஒருவர். அவரிடம் ஒருங்கிணைந்த தாக்குதலுக்கு பலரை ஒருங்கிணைக்கும் திறன் இருந்தது.

அரச மற்றும் இராணுவ புலனாய்வு பிரிவுகளுக்கு சஹ்ரான் ஹாசிமை தெரிந் திருந்தது. அவர்கள் அவருடன் இணைந் தும் செயல்பட்டுள்ளனர். தாக்குதலுக்கு முன்னரும் - தாக்குதலின் போதும் - அதன் பின்னரும் அவர்கள் இணைந்து பணியாற்றியுள்ளனர் - என்றும் அவர் தெரிவித்தார்.

தொடர்ந்தும், "வவுணதீவில் இரண்டு பொலிஸார் கொல்லப்பட்ட மைக்கு முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களே காரணம் என்ற கருத்தை உருவாக்குவதற்கு புலனாய்வு பிரிவினர் கடுமையாக முயற்சித்தனர். அவர்கள் சில ஆதாரங்களை திட்ட மிட்டு உருவாக்கினார்கள் இது குறித்து குற்றப் புலனாய்வு பிரிவுக்கு பெரும் சந்தேகம் காணப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கும் ஐ. எஸ். அமைப்புக்கும் தொடர்புள்ளதா என கண்டறிவதற்கான விசாரணைகளை தேசிய புலனாய்வு பிரிவின் இன்ஸ்பெக் டர் பண்டார முன்னெடுத்தார். எனினும், இந்த விசாரணைகள் இடை நிறுத்தப்பட்டன. ஐ. எஸ். அமைப்பி டமிருந்து சஹ்ரானுக்கு உதவிகள் கிடைத்தன என்பதற்கான ஆதாரங்கள் எதுவுமில்லை.

தேசிய புலனாய்வு பிரிவின் தற் போதைய தலைவர் சுரேஷ் சாலேக்கும் சி. ஐ. டியினருக்கும் சுமுகமான உறவு காணப்படவில்லை. சனல் 4 இன் குற்றச் சாட்டு குறித்து விசாரணைகள் இடம் பெற வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# கஜேந்திரகுமாரும், கஜேந்திரனும் அடுத்த வாரம் ஜெனிவா பயணம்

## திருமலை சம்பவம் குறித்தும் முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப். 20

**இலங்கை தொடர்பான பக்க நிகழ்வுகளில் பங்கேற்பதற்காகவும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உயர்மட்டப்பிரதிநிதிகளைச் சந்திப்பதற்காகவும் எதிர்வரும் 24 ஆம் திகதி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் ஜெனிவா செல்லவுள்ளனர்.**

அங்கு இடம்பெறவுள்ள சந்திப்புக் கள் குறித்து இன்னமும் உறுதியாகத் தீர்மானிக்கப்படாத போதிலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் அதிகாரிகள், இணையனுசரணை நாடுகள் மற்றும் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுடன் விசேட சந்திப்புக்களை நடத்துவதற்கு அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

திருமலையில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பிலும் முறையிடவுள்ளனர்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடரின் ஓரங்கமாக, வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் பணிக் குழுவின் அறிக்கை மீதான கலந்துரையாடல் நடைபெறவிருப்பதுடன் இதன்போது இலங்கையில் இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் தொடர்பிலும் ஆராயப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. தொடக்கநாள் அமர்வில் இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் பேரவையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப் புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' என்ற தலைப்பிலான 51ஃ1 தீர்மானத்தின் உள்ளடக்க அமுலாக்கத்தில் அடையப்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் நாட்டின் தற்போதைய மனித உரிமைகள் நிலைவரம் என்பன தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பதில் ஆணையாளர் நாடா அல்-நஷீஃப் உரையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## பயங்கரவாத சட்டமூலத்துக்கு எதிராக நீதிமன்றம் செல்லவுள்ளது சஜித் தரப்பு



கொழும்பு, செப். 20

திருத்தம் செய்யப்பட்டு மீள பாராளுமன்றில் முன்வைக்கப்படவுள்ள, உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி, நீதிமன்றத்தை நாடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சட்டமூலத்தில் எவ்வாறான திருத்தங்கள் முன்வைக்கப்பட்டாலும், அதற்கு தமது தரப்பு எதிர்ப்பை வெளியிடும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்தார். (அ)

# கொழும்பை நெருங்கும் சீனாவின் உளவுக் கப்பல்

கொழும்பு, செப். 20

ஷி யான் 6 எனும் சீனாவின் உளவுக் கப்பல், கொழும்பு நோக்கிச் செல்வதற்காக மலாக்கா நீரிணைக்குள் பிரவேசித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் வெளியான தகவல்களின்படி, ஷி யான் 6 கப்பலுக்கு கொழும்பு துறைமுகத்தின் கப்பற்துறைக்கு செல்ல இலங்கை பாதுகாப்பு அமைச்சு அனுமதி அளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், இந்த கோரிக்கை இன்னும் பரிசீலனையில் இருப்பதாகவும், அனுமதி வழங்கப்படவில்லை என்றும் வெளிவிவகார அமைச்சகத்தின் பேச்சாளர் பிரியங்கா விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இந்த கப்பல் இலங்கையின் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த கப்பல் கொழும்பில் நங்கூரமிட ஒப்புதல் அளிக்கப்பட்டதாக வெளியான செய்திகளைத் தொடர்ந்து, இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், கடந்த மாதம் திட்டமிடப்பட்டிருந்த இலங்கைக்கான தமது பயணத்தையும் இரத்து செய்திருந்தார்.

நிதி சவால்களை எதிர்கொள்ளும் இலங்கை, வெளிநாட்டுக் கடனை மறுசீரமைக்கும் முயற்சிகளில் இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளையும் முக்கிய பங்காளிகளாகக் கருதுகிறது.

இருதரப்புக் கடன் வழங்குபவர்களிடம் 7.1 பில்லியன் டொலர் கடனைப் பெற்றுள்ள இலங்கை, அதில் கணிசமான பகுதியான 3 பில்லியன் டொலரை சீனாவுக்கு செலுத்தவேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மீண்டும் பாடசாலை திரும்பினார் வைஷாலி!



யாழ்ப்பாணம், செப். 20

காய்ச்சலுக்காக வைத்தியசாலைக்கு சென்று தனது ஒரு கையினை பறிகொடுத்த சாண்டில்யன் வைஷாலி மீண்டும் நேற்று கற்றல் நடவடிக்கைகளுக்காக பாடசாலை திரும்பியுள்ளார்.

நேற்று முற்பகல் சாண்டில்யன் வைஷாலி பாடசாலைக்கு சமூகம் தந்தபோது சக மாணவர்கள், ஆசிரியர்கள் அவரை பூங்கொத்து வழங்கி வரவேற்றனர்.

எட்டு வயதுடைய சாண்டில்யன் வைஷாலி காய்ச்சல் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அவருக்கு கனுலா வாயிலாக மருந்தேற்றப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

கனுலா ஏற்றப்பட்ட பகுதியில் ஏற்பட்ட தாக்கம் காரணமாக வைஷாலியின் இடது கையின் ஒரு பகுதி அகற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சிறுமி வைஷாலியின் பெற்றோரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிறுமியின் துண்டிக்கப்பட்ட கையின் ஒரு பகுதியை கொழும்புக்கு அனுப்பி விசாரணைகளை முன்னெடுக்குமாறும் யாழ். நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அத்துடன், குறித்த சம்பவத்தை தொடர்ந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடமை நேரத்தின் போது தாதியர்கள், சுகாதார ஊழியர்கள், பாதுகாப்பு பணியாளர்கள் மற்றும் நோயாளர் பராமரிப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் என அனைவருக்கும் கையடக்க தொலைபேசியை பயன்படுத்தத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சிறுமியின் இடது கையின் மணிக்கட்டு பகுதி அகற்றப்பட்டுள்ளமை தொடர்பில் முழுமையான அறிக்கையொன்று தனக்கு கிடைக்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

# வவுனியா பல்கலைக்கழகத்தில் புறக்கணிக்கப்படும் தமிழ்மொழி

## சட்ட நடவடிக்கை தேவை என்கிறார் சார்ள்ஸ் எம்.பி.



கொழும்பு, செப். 20

வவுனியா பல்கலைக் கழகத்தில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டமை வேதனைக்குரிய விடயமென்றும் இத்தைகைய செயற்பாடு மீண்டுமொரு முறை நடைபெறாதவாறு சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்தினார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வவுனியா பல்கலைக்கழகத்தின் பௌதிக வளங்கள் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படவேண்டும். வவுனியா பல்கலைக் கழகமானது, யாழ்.பல்கலைக்கழகத்தின் கீழ் வவுனியா வளாகமாக 32 வருடங்களாக இருந்து அதன்பின்னர் வவுனியா பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டு 2 வருடங்களாகியுள்ள நிலையிலும் வவுனியா வளாகமாக செயற்பட்டபோது காணப்பட்ட பௌதிக வளங்களை கொண்டே தற்போதும் பல்கலைக்கழகமாக செயற்படுகின்றது.

இலங்கையில் இறுதியாக 17ஆவது பல்கலைக்கழகமாக உருவாக்கப்பட்ட வவுனியா பல்கலைக்கழகத்தின் பௌதிக வளங்கள் தொடர்பாக தேசிய கொள்கை திட்டமிடல் ஊடாக 8 திட்டங்கள் அனுமதியளிக்கப்பட்டுள்ளதோடு 3 அமைச்சரவைப் பத்திரங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அத்தோடு வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தருடன் பேச்சு நடந்த கல்வி அமைச்சர் ஏற்பாடு செய்து தரவேண்டும்-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# உலகக் கிண்ண இங்கிலாந்து அணியில் ஜோப்ரா ஆர்ச்சர்!




லண்டன், செப். 20

உலகக்கிண்ணத் தொடருக்கான இங்கிலாந்து அணியுடன் ஆர்ச்சர் கூடுதல் வீரராக சேர்க்கப்பட்டுள்ளார்.

50 ஓவர் உலகக்கிண்ணத் தொடர் இந்தியாவில் வரும் ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் நடைபெறவுள்ளது. உலகக் கிண்ணத் தொடரின் தொடக்க ஆட்டத்தில் ஒக்ரோபர் 5ஆம் திகதி இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகள் அகமதாபாத்தில் மோதவுள்ளன.

இந்நிலையில், உலகக் கிண்ணத் தொடருக்கான இங்கிலாந்து அணி கடந்த சில தினங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டது. இதில், காயம் காரணமாக ஜோப்ரா ஆர்ச்சர் அணியில் இடம் பெறவில்லை.

இந்நிலையில் உலகக் கிண்ணத் தொடருக்கான இங்கிலாந்து அணியில் ஆர்ச்சர் கூடுதல் வீரராக பயணிக்கவுள்ளார் என்று அந்த அணியின் தேர்வு குழு தலைவரான லுக் ரைட் தெரிவித்துள்ளார். இதனால் ரசிகர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

உலகக் கிண்ணத் தொடருக்கான இங்கிலாந்து அணி:

ஜோஸ் பட்லர் (அணித் தலைவர்), மொயின் அலி, கஸ் அட்கின்சன், ஜொன்னி பெயர்ஸ்ரோ, சாம் கரன், லியொம் லிவிங்ஸ்ரன், டேவிட் மலன், அடில் ரஷித், ஜோ ரூட், ஹாரி புரூக், பென் ஸ்டோக்ஸ், ரீஸ் டாப்லி, டேவிட் வில்லி, மார்க் வூட், கிறிஸ் வோக்ஸ்.

கூடுதல் வீரர்: ஜோப்ரா ஆர்ச்சர் (ஐ)



சி. பி. எல். தொடர்:

## ஒரு ஓவரில் 32 ஓட்டங்கள் குவிப்பு சாய் ஹோப் சதமடித்து சாதனை!

கயானா, செப். 20

கரீபியன் பிறீமியர் லீக் தொடரில் ஒரு ஓவரில் 32 ஓட்டங்களை குவித்து சாதனை படைத்துள்ளார் சாய் ஹோப்.

மேற்கிந்தியத் தீவுகளில் கரீபியன் பிறீமியர் லீக் 2023 தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் நடைபெற்ற கடைசி லீக் போட்டியில் கயானா அமேசன் வோரியர்ஸ் மற்றும் பார்படாஸ் றோயல்ஸ் அணிகள் மோதின.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற பார்படாஸ் அணி முதலில் பந்து வீசுவதாக அறிவித்தது. பிளே ஓவ் சுற்றுக்கு 4ஆவது அணியாக தகுதி பெறுவதற்கு இந்த போட்டியில் நிச்சயம் வென்றாக வேண்டிய கட்டாயத்தில் இரு அணிகளும் களமிறங்கின.

முதலில், துடுப்பெடுத்தாடிய கயானா அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்களை இழந்து 226 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக சாய் ஹோப் 106 ஓட்டங்கள் குவித்தார். 227 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பார்படாஸ் அணி 20 ஓவர் முடிவில் 6 விக்கெட்களை இழந்து 138 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதனால் 88 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கயானா அணி வெற்றி பெற்று பிளே ஓவ் சுற்றுக்கு தகுதி பெற்றது.

இந்த போட்டியில் அதிரடியாக விளையாடி சதம் அடித்த சாய் ஹோப் ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார். ஒரு கட்டத்தில் 53 பந்துகளில் 69 ஓட்டங்கள் எடுத்திருந்த அவர் 16ஆவது ஓவரில் 4 சிக்ஸர் மற்றும் 2 பௌண்ட்றிகளை விளாசி 32 ஓட்டங்கள் எடுத்தார்.

இதன் மூலம் சி. பி. எல். தொடரில் தம்முடைய முதல் சதத்தை ஹோப் பதிவு செய்தார். மேலும் சி. பி. எல். தொடரில் அதிவேகமாக சதமடித்த இரண்டாவது வீரர் என்ற சாதனையை அவர் படைத்தார்.

## சன்டியாகோ ஓப்பன் ரென்னிஸ் வாகை சூடினார் கிரெஜ்சிகோவா

கொழும்பு, செப். 20

அமெரிக்காவில் நடைபெற்ற சன்டியாகோ ஓப்பன் மகளிர் ரென்னிஸ் போட்டியில் ஒற்றையர் பிரிவில் செக் குடியரசின் பார்பரா கிரெஜ்சிகோவா சம்பியன் பட்டம் வென்றார்.

போட்டித்தரவரிசையில் 4ஆம் இடத்திலிருந்த அவர், இறுதிச்சுற்றில் 6-4, 2-6, 6-4 என்ற செற்களில், அமெரிக்காவின் சோபியா கெனினை சாய்த்து சம்பியன் ஆனார். இது அவரின் 7ஆவது சுற்று சம்பியன் பட்டமாகும்.

நடப்பாண்டில் இது அவரின் 2ஆவது கிண்ணமாகும். முன்னதாக கடந்த பெப்ரவரியில் டுபாய் ஓப்பனில் கிரெஜ்சிகோவா வாகை சூடியிருந்தார்.

இந்தத் தொடரின் இரட்டையர் பிரிவிலும் பார்பரா கிரெஜ்சிகோவா தனது சக நாட்டவரான காட்டெரினா சினியாகோவாவுடன் இணைந்து சம்பியன் பட்டம் வென்றார்.

இறுதிச்சுற்றில் இந்த இணை 6-1, 6-4 என அமெரிக்காவின் டேனியல் காலின்ஸ்/கோகோ வான்டெவெக் கூட்டணியை சாய்த்தது. (ஐ)





## உலகக் கிண்ண தொடர் புதிய சீருடையில் நியூசி.

வெலிங்டன், செப். 20

இந்தியாவில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்க நியூசிலாந்து அணி புதிய சீருடையை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தியாவில் வரும் ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் 50 ஓவர் உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது.

இந்த தொடரில் இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா உள்ளிட்ட 10 அணிகள் கலந்து கொள்கின்றன. உலகக்கிண்ணத் தொடரின் தொடக்க ஆட்டத்தில் இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகள் அகமதாபாத்தில் மோதவுள்ளன.

இந்நிலையில், உலகக் கிண்ணத்தில் பங்கேற்கவுள்ள நியூசிலாந்து அணி புதிய சீருடையை அறிமுகப்படுத்தி உள்ளது.

இதனை நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் அதிகார பூர்வ எக்ஸ் (ருவிற்றர்) தளத்தில் வேகப்பந்து வீச்சாளர்கள் லக்கி பெர்குசன் மற்றும் டிரென்ட் போல்ட் மற்றும் விக்கெட் காப்பாளர் ரொம் லதாம் ஆகியோர் புதிய ஜெர்சியை அணிந்திருந்த புகைப்படத்தை பதிவிட்டு அறிமுகப்படுத்தி உள்ளது. (ஐ)

# ஒருநாள் போட்டி தரவரிசை மீண்டும் முதலிடத்தில் பாக்.



டுபாய், செப். 20

இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட 6 அணிகள் பங்கேற்ற ஆசிய கிண்ண ஒருநாள் தொடர் மற்றும் அவுஸ்திரேலியா- தென்னாபிரிக்கா இடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் முடிவடைந்துள்ளன.

இந்நிலையில், ஒருநாள் கிரிக்கெட்டில் அணிகளுக்கான தரவரிசை பட்டியலை ஐ. சி. சி. வெளியிட்டது. அதில், பாகிஸ்தான் அணி மீண்டும் முதல் இடத்துக்கு முன்னேறியுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் தோல்வியை தழுவியதால் அவுஸ்திரேலிய அணி 3ஆவது இடத்துக்கு சரிந்தது. அந்த அணி உலகக் கிண்ணத் தொடருக்கு முன் மீண்டும் முதலிடத்துக்கு முன்னேற இந்தியாவுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 3-0 என முழுமையாக கைப்பற்ற வேண்டும்.

இந்திய அணி தற்போது தரவரிசையில் 2ஆவது இடத்தில் உள்ளது. வரவிருக்கும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரை கைப்பற்றினால் உலக கிண்ணத் தொடருக்கு முன்னர் முதலிடத்தைப் பிடிக்கும். (ஐ)

கத்யா அட்லர்

# ரஷ்யாவின் அடுத்த குறி யார்?

# அச்சத்தில் அண்டை நாடுகள்!



ரஷ்யா - யுக்ரேன் போரில், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள், யுக்ரேனுக்கு ஆயுத உதவிகள் செய்து வருகின்றன என்பதை உலகறியும்.

நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகள், எஃப்16 ரக போர் விமானங்கள் உள்ளிட்டவை இந்த ஆயுத உதவியில் அடங்கும். ஆனால், யுக்ரேனிய ராணுவ வீரர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் மற்றொரு உதவியான “சௌனாஸ்” பற்றி உலகம் அவ்வளவாக அறிந்திருக்கவில்லை.

ஆனால், முன்னாள் சோவியத் ஒன்றிய குடியரசுகளில் ஒன்றும், ரஷ்யாவின் அண்டை நாடுமான எஸ்டோனியா நாட்டைச் சேர்ந்த திரைப்பட தயாரிப்பாளரும், போரில் உதவி பணிகளை மேற்கொள்ளும் நோக்கில் யுக்ரேனுக்கு அவ்வபோது பயணம் மேற்கொண்டு வருபவருமான இல்மர் ராக், சௌனாஸ் பற்றி நன்கு அறிந்திருக்கிறார்.

கிரவுட் ஃபண்டிங் எனப்படும் கூட்டு நிதி திட்டத்தின் கீழ் நிதி திரட்டி அதன் மூலம் யுக்ரேன் ராணுவ வீரர்களுக்கு உதவும் நோக்கில் நூற்றுக்கணக்கான சௌனாஸ் அலகுகளை உருவாக்கி வருகிறார் ராக்.

### எஸ்டோனியாவின் ராணுவ பாரம்பரியம்

மரத்தினாலான நகரும் சிறு குடியிருப்பு போன்ற வடிவமைப்பு சௌனாஸ் என்று அழைக்கப்படுகிறது. ராணுவ சீருடைகளை துவைப்பது உள்ளிட்ட பணிகளுக்காக யுக்ரேன் ராணுவ வீரர்கள் இந்த வடிவமைப்பை பயன்படுத்தி வருகின்றனர்.

ரஷ்ய ராணுவத்தின் தாக்குதலில் இருந்து தப்பிக்கும் நோக்கில் அவர்களை உருமறைப்பு செய்ய இந்த சீருடைகள் யுக்ரேன் ராணுவ வீரர்களுக்கு பயன்படுகின்றன.

சௌனாஸ் வடிவமைப்பு குறித்து நன்கு அறிந்தவர்களாக உள்ளனர் எஸ்டோனியர்கள். ஏனெனில், போர்களின் போது அந்நாட்டில் பின்பற்றப்படும் ஒரு ராணுவ பாரம்பரியமாக இது உள்ளது.

குளிர் கால இரவுகளை சூடாக வைத்திருப்பதை போல, ராணுவ வீரர்களை சுகாதாரம் மற்றும் அவர்களின் மன உறுதியை அதிகரிக்க இந்த வடிவமைப்பு பயன்படுகிறது.

ஆஃப்கானிஸ்தான் பாலைவனம் மற்றும் லெபனானில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ராணுவ நடவடிக்கைகளின் போது எஸ்டோனிய வீரர்கள் தங்களது நகரும் சௌனாஸ் வடிவமைப்பு இல்லாமல் பயணம் செய்திருப்பது அரிது.

இது 100 ஆண்டுகளுக்கு முன், போல்ஷ்விக்குகளுக்கு எதிரான எஸ்டோனியா போரின்போது தொடங்கிய ஒரு ராணுவ பாரம்பரியமாகும்.

அப்போது எஸ்டோனியா நாட்டின் ரயில்வே துறை சார்பில், சௌனாஸ் வசதியுடன் கூடிய ரயில் ஒன்று வடிவமைக்கப்பட்டது. இதன் மூலம், நாட்கணக்கில் பதுங்கு குழியில் இருக்கும் போர் வீரர்கள் வெளியே வந்து, குளிக்கவும், தங்களைத் தாங்களே கிருமி நீக்கம் செய்து கொள்ளவும் முடிந்தது.

யுக்ரேனிய வீரர்கள் தங்களின் காலணிகளைக் கழுவாமல் அல்லது கழற்றாமல் நாட்கணக்கில் அல்லது வாரக்கணக்கில் கூட களத்தில் இருப்பதை கேள்விப்பட்டதாக கூறுகிறார ராக்.

அத்தகைய சூழலில் எஸ்டோனியர்களின் சௌனாஸ் வடிவமைப்பு தங்களுக்கு கிடைக்கப் பெற்றிருப்பது “கடவுளின் வரம்” என்று யுக்ரேனிய ராணுவ தளபதி ஒருவர் பாக்முட் அருகே தம்மிடம் தெரிவித்ததாகவும் ராக் கூறினார்.

### யுக்ரேனின் வலியை உணர்வதாக கூறும் லாட்வியா, லிதுவேனியா

இல்மர் ராக்கை போல, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோ கூட்டமைப்பில் அங்கும் வகிக்கும் நாடுகளில் வசிக்கும் பலர், ரஷ்யா -யுக்ரேன் போரில், யுக்ரேனுக்கு தங்களால் இயன்ற அனைத்து உதவிகளையும் செய்து வருகின்றனர்.

எஸ்டோனியா மற்றும் அவற்றின் அண்டை நாடுகளான லாட்வியா மற்றும் லிதுவேனியா, இரண்டாம் உலகப் போருக்குப் பின், பல தசாப்தங்கள் சோவியத் யூனியனால் ஆக்கிரமிக்கப்பட்டன. எனவே, ரஷ்ய படையெடுப்பால் யுக்ரேனுக்கு ஏற்பட்டுள்ள வலியை தாங்கள் நன்கு உணர்ந்துள்ளதாக அந்நாட்டினர் கூறுகின்றனர்.

இதன் காரணமாக அவர்கள், அமெரிக்கா மற்றும்




பிரிட்டன் உள்ளிட்ட வேறு எந்த நாட்டையும்விட, யுக்ரேனுக்கு குறுகிய கால பொருளாதார உதவிகளை அளித்துள்ளனர் அல்லது அதற்கான உறுதிமொழியை வழங்கி உள்ளனர்.

ஜெர்மனியில் கீல் இன்ஸ்டிட்யூட்டின் சமீபத்திய புள்ளி விவரங்களின்படி, யுக்ரேனுக்கு அளிக்கப்பட்டு வரும் நீண்டகால உதவிகளை கணக்கில் எடுத்துக் கொள்ளும் போது, லாட்வியா மற்றும் லிதுவேனியா நாடுகளை நோர்வே மட்டும் விஞ்சி நிற்கிறது. யுக்ரேன் போர் தொடங்கியதில் இருந்து அந்நாட்டுக்கு பல்வேறு நாடுகள் அளித்துவரும் உதவிகளை இந்த நிறுவனம் கண்காணித்து வருகிறது.

### ரஷ்யாவின் அடுத்த குறி யார்?

யுக்ரேனிய சர்வதேச படைப்பிரிவில் தன்னார்வ துப்பாக்கி சுடும் வீரரான லிதுவேனியாவைச் சேர்ந்த மிண்டாகாஸ் லியுடுவின்காஸ், யுக்ரேன் போரில் பங்கேற்பதற்கு தமக்கு வேறு காரணங்கள் உள்ளதாக கூறுகிறார்.

தம்மை ஒரு பெருமை மிக்க தேசபக்தராக கூறிக்கொள்ளும் அவர், யுக்ரேன் போரில் ரஷ்யாவுக்கு எதிராக சண்டையிடுவதன் மூலம், தனது சொந்த நாட்டைப் பாதுகாப்பதாக மிண்டாகாஸ் நம்புகிறார்.

“நாங்கள் ரஷ்யாவை யுக்ரேனில் தடுத்தி நிறுத்தியே ஆக வேண்டும்” என்று ஆக்ரோஷமாக கூறியபடி, அடுத்த தாக்குதலுக்கான பயணத்துக்கு ஆயத்தமானார் மிண்டாகாஸ்.

யுக்ரேனிய போரின் இறுதியில் ரஷ்யா வெற்றி பெற்றுவிட்டால், புடினின் அடுத்த குறி தாங்களாக இருக்கலாம் என்ற அச்சம் லிதுவேனியர்களிடம் உள்ளது.

மேற்கத்திய நாடுகளின் ராணுவ கூட்டமைப்பான நேட்டோவில் ஒரு பகுதியாக இருக்கும் ரஷ்யாவின் அண்டை நாடுகளில் லிதுவேனியாவும் ஒன்றாகும்.

ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு தொடர்பான திட்டங்கள் குறித்தும், மேற்கத்திய நாடுகளை பலவீனம் மற்றும் ஸ்திரமற்றதாகவும் ஆக்கும் புடினின் நோக்கம் பற்றியும் பல்வேறு நாடுகள் நீண்ட காலமாக உரத்த குரலில் எச்சரித்து வந்துள்ளன.

### நேட்டோவில் இணைந்த பின்லாந்து

இந்த நிலையில், யுக்ரேன் மீதான ரஷ்யாவின் முழு வீச்சிலான தாக்குதல் நடவடிக்கைகள் நேட்டோவிற்கு புது அர்த்தத்தை அளித்துள்ளது. ரஷ்யாவின் எல்லைக்கு அருகில் உள்ள நாடுகளை சேர்த்து நேட்டோ கூட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும் என்ற தூண்டுதலை மேற்கத்திய நாடுகளுக்கு அளித்துள்ளது.

குறிப்பாக, ரஷ்யாவுடன் 1,300 கிலோமீட்டர் நிலப்பரப்பை பகிர்ந்து கொள்ளும் நாடான பின்லாந்து நேட்டோ அமைப்பில் இணைய முதலில் தயக்கம் காட்டிதான் வந்தது. அதன் விளைவாக ரஷ்யா போர் தொடுக்கலாம் என்ற காரணத்தால் பின்லாந்துக்கு இந்த அச்சம் இருந்திருக்கலாம்.

ஆனால், யுக்ரேன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்த துவங்கியதும். நேட்டோவில் இணைவது குறித்த தனது நிலைப்பாட்டை பின்லாந்து முற்றிலும் மாற்றிக் கொண்டது. யுக்ரேன் போர் தொடங்கிய உடனே, நேட்டோ அமைப்பில் சேர ஸ்வீடனுடன் இணைந்து பின்லாந்தும் விருப்பம் தெரிவித்தது.

நேட்டோ கூட்டமைப்பில் சேர்ந்ததும் பின்லாந்தில் ஆயுத பயிற்சியில் சேர்பவர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது. அந்நாட்டு இளைஞர்களுக்கு ராணுவ சேவை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஆனால், இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு பிறகு, ரஷ்யா குறித்து அச்சம் தங்களுக்கு அதிகமாகி உள்ளதாக பின்லாந்து மக்கள் கூறுகின்றனர்.

### போரினால் பாதிக்கப்பட்ட சுற்றுலா

மேலும், யுக்ரேன் போரின் விளைவாக பின்லாந்து நிறுவனங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தப் போர் தொடங்குவதற்கு முன்பு வரை ரஷ்யர்களின் சுற்றுலா வருகையின் மூலம் ஆண்டுக்கு சுமார் 630 மில்லியன் டாலர்கள் வருவாயை இந்நிறுவனங்கள் ஈட்டி வந்தன.

ஆனால், ரஷ்யாவின் எல்லைப் பகுதிகளில் அமைந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அல்லது ரஷ்யாவுடன் நட்புறவுடன் இருந்து வந்த பெலாரஸை போலவே, பின்லாந்தும் தங்கள் நாட்டுக்கு சுற்றுலா வரும் ரஷ்யர்களுக்கு விசா வழங்குவதை தற்போது நிறுத்தி வைத்துள்ளது.

யுக்ரேன் போரில் ரஷ்யா வெற்றி பெற்று புடின் தமது அதிகாரத்தை அதிகரித்து கொண்டால் அடுத்து என்ன நடக்கும் என்று நினைத்து பார்க்கவே பயமாக உள்ளது என்கிறார் பின்லாந்துக்கு உட்பட்ட லாப்லாந்தில் இயங்கிவரும் ரிசார்ட்டின் உரிமையாளரான அஹோ.

### ரஷ்யா குறித்த அச்சம்

“ரஷ்யாவின் அடுத்த இலக்கு பின்லாந்து, போலந்து, எஸ்டோனியா அல்லது லிதுவேனியாவா? என்று அச்சம் தெரிவிக்கும் அவர், யுக்ரேன் போர் தானாக நிற்காது. ஆனால் எங்களின் அச்சம் எல்லாம் யுக்ரேன் போருடன் முடிவுக்கு வந்துவிட வேண்டும்” என்று அவர் கூறுகிறார்.

ரஷ்ய அதிபர் வழக்கமான போரை மட்டும் முன்னெடுக்கவில்லை. மேற்கத்திய நாடுகளுக்கு எதிரான சைபர் தாக்குதல்கள் அல்லது தவறான தகவல் பிரசாரங்களை



மேற்கொள்வதாக மாஸ்கோ மீது அடிக்கடி குற்றம் சாட்டப்படுகிறது.

இது லிதுவேனியாவைப் போல, லாட்வியா போன்ற ரஷ்யாவின் எல்லையில் உள்ள நாடுகளை பதற்றமடையச் செய்கிறது.

பெலாரஸில் இருந்து 25 கிலோமீட்டர் தொலைவிலும், ரஷ்யாவில் இருந்து 120 கிலோமீட்டர் தூரத்திலும் அமைந்துள்ளது லாட்வியாவின் இரண்டாவது நகரமான டகாவ்பில்ஸ்.

இந்த நகரில் வசிக்கும் 10 பேரில் எட்டு பேர் லாட்வியனுக்குப் பதிலாக தங்களது வீடுகளில் ரஷ்ய மொழி பேசுபவர்களாகவே உள்ளனர். அதேபோன்று பெரும்பாலோர் ரஷ்ய மொழி கற்பிக்கப்படும் பள்ளிகளில் படித்தவர்கள். அவர்கள் பாராம்பரியமாக ரஷ்ய தொலைக்காட்சி, வானொலி மற்றும் செய்தி வலைத்தளங்களில் இருந்து தங்கள் செய்திகளை அறிந்து வந்தவர்களாக உள்ளனர்.

லாட்வியாவின் பிற பகுதிகள போல் அல்லாமல், டகாவ்பின்ஸ் நகர வீதிகளில் யுக்ரேனிய கொடிகள் பறக்காததை காண முடிகிறது.

லாட்வியன் ரஷ்யர்கள் எந்த வகையிலும் புடினுக்கு ஆதரவானவர்கள் அல்ல என்றாலும், அந்த நகர வீதிகளில் செல்பவர்கள் போரைப் பற்றி பேச விரும்பவில்லை என்பது மட்டும் புரிகிறது.

ரஷ்யாவை ஆக்கிரமிப்பாளராகப் பார்க்கிறீர்களா, யுக்ரேனை பலியாடாகப் பார்க்கிறீர்களா என்ற கேள்விக்கு அவர்கள் பதிலளிக்க மறுத்ததில் இருந்து இதனை புரிந்து கொள்ள முடிகிறது.

ஆனால், லாட்வியாவில் உள்ள ரஷ்யர்களை, ரஷ்ய பிரசாரத்தில் இருந்து தனிமைப்படுத்தும் முயற்சியில் லாட்வியன் அரசாங்கம் இறங்கி உள்ளது.

அங்கு ரஷ்ய தொலைக்காட்சி சேனல்கள் தடை செய்யப்பட்டுள்ளன. பள்ளிகளில் ரஷ்ய மொழி கற்பித்தலும் நிறுத்தப்பட்டுள்ளது. சோவியத் காலத்திய நினைவுச் சின்னங்களும் இடிக்கப்பட்டுள்ளன.

இதன் விளைவாக, பல இன ரஷ்யர்கள் அந்நியப்படுத்தப்படும் அபாயமும், அவர்கள் புடினின் கரங்களுக்குள் தள்ளப்படும் ஆபத்தும் உள்ளதாக விமர்சகர்கள் எச்சரிக்கின்றனர்.

●

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள்;
# சர்வதேச விசாரணையையும் சர்வதேச நீதியையும் வேண்டிநிற்கும் சர்வதேசக் குற்றச்செயல்

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களுக்கு பின்னணியில் உள்ள கதையை வெளிப்படுத்துவதாகக் கூறும் சனல் 4 விவரணக் காணொளி அந்த தாக்குதல்களுக்கு பின்னணியில் இருந்திருக்கக்கூடியவர்யார்? அவர்கள் ஏன் அவ்வாறு செய்தார்கள்? என்பது பற்றி நாட்டில் விவாதத்தை மீண்டும் வைத்திருக்கிறது. இதற்கு விடை காண்பது சுலபமானது அல்ல.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்தியவர்களினதும் அதில் பலியானவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களினதும் அடையாளங்கள் தெரிந்தவையே. எட்டு தற்கொலைக் குண்டுதாரிகள் மரணமடைந்தார்கள். 269 அப்பாவி குடிமக்களும் மரணமடைந்தர்கள். குண்டுதாரிகள் சகலரும் முஸ்லிம்கள். அவர்களில் சிலர் மிகவும் படித்தவர்கள் என்பதுடன் வசதிபடைத்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தார்கள். அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக நம்பிய ஒரு இலட்சியத்துக்காக அன்றி மற்றும்படி அவர்கள் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்திருக்கமாட்டார்கள்.

பலியானவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் சிங்கள,தமிழ்க் கத்தோலிக்கர்கள். 45 பேர் வெளிநாட்டவர்கள். பலியானவர்களில் பெரும் எண்ணிக்கையான சிறுவர்களும் அடங்குவர். அவர்களில் மூவர் ஸ்கொட்லாந்தின் மிகப்பெரிய நிலச்சுவாந்தாரின் மூன்று பிள்ளைகள்.

எந்த விதத்தில் நோக்கினாலும் இது சர்வதேச விசாரணையையும் சர்வதேச நீதியையும் வேண்டிநிற்கும் ஒரு சர்வதேசக் குற்றச்செயல். பதவியில் இருந்த அரசாங்கத்தை மலினப்படுத்துவதன் மூலமாக முன்னர் ஆட்சியில் இருந்தவர்களை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவருவதற்கு களத்தை அமைப்பதற்கு சதித்திட்டம் ஒன்றைத் தீட்டினார்கள் என்ற ஒரு கதையை சனல் 4 விவரணக் காணொளியைத் தயாரித்தவர்கள் கூறுகிறார்கள்.

நாட்டின் தேசிய பாதுகாப்பு கட்டமைப்பின் பலவீனத்தை வெளிச்சம் போட்டுக் காட்டிய ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் 7 மாதங்கள் கழித்து நடந்த ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ச வெற்றி பெறுவதற்கு வழிவகுத்தது. வெளிநாடுகளில் தஞ்சம் கோருபவர்கள் சிலர் கூறும் விபரங்களைக் கொண்டிருக்கும் சனல் 4 விவரணக் காணொளி நாட்டின் புலனாய்வு இயந்திரத்தின் சில பிரிவினர் கோட்டாபய ராஜபக்ச தேர்தலில் வெற்றிபெறுவதற்கு வசதியான சூழ்நிலையை தோற்றுவிப்பதற்கு தற்கொலைக் குண்டுதாரிகளுடன் சேர்ந்து சதி செய்தார்கள் என்று கூறுகிறது.

ஈவிரக்கமற்ற இந்த குற்றச்செயலை செய்ததாக குற்றஞ்சாட்டப்படுபவர்களும் மற்றவர்களும் கோட்டாபய ராஜபக்ச தேர்தலில் வெற்றிபெறுவதற்கு உதவ தற்கொலைக் குண்டுதாரிகள் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்திருப்பார்கள் என்று கூறுவதில் தர்க்க நியாயம் இல்லை என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவர் தனது சகோதரர் மகிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தில் பாதுகாப்பு செயலாளராக இருந்தபோது முஸ்லிம்களுக்கு எதிரான பெரிய கலவரங்களினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் இலங்கை முஸ்லிம்கள் அவர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று சர்வ வல்லமையும் கொண்டவராக வருவதை விரும்பி யிருக்கமுடியாது.

இலங்கையில் முஸ்லிம்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையில் பகைமை வரலாறு ஒன்று இல்லாதபோது தற்கொலைக் குண்டுதாரிகள் தங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ சமூகங்களை இலக்காக தெரிவு செய்திருப்பதற்கான சாத்தியத்தையும் மேற்சொன்ன காரணம் இல்லாமல் செய்கிறது.

அவர்கள் ஏதாவது ஒரு சமூகத்தை தங்கள் தாக்குதல்களுக்கு இலக்காக தெரிவுசெய்வதாக இருந்தால் அது பௌத்தர்களாகவே இருந்திருக்கக்கூடும். பௌத்தர்களில் சில பிரிவினர் பிக்குமாரின் தலைமையில் பல சந்தர்ப்பங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக கலவரங்களில் ஈடுபட்டார்கள். அதனால் குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் ' வெளிச்சூத்திரதாரி' இருந்திருக்கவேண்டும்.

### தோல்விகண்ட விசாரணைகள்

குண்டுத் தாக்குதல்களுக்கு பிறகு குறைந்த பட்சம் இரு மாதங்களாக நாட்டில் குறிப்பாக நகரப் பகுதிகளில் பீதி நிலவியது என்பது அந்த தாக்குதல்களின் இருந்த அதிர்ச்சிகரமான அம்சத்தை வெளிக்காட்டியது. ஏக காலத்தில் ஒரே மாதிரியான ஆறு குண்டுத் தாக்குதல்களுக்கு வழிவகுத்த மிகவும் கச்சிதமும் நுட்பமும் நிறைந்த திட்டமிடல் அதை நடத்தியவர்களிடம் முப்பது வருடகாலமாக அரசாங்கத்துக்கு எதிராகப் போரில் ஈடுபட்ட விடுதலைப் புலிகளிடமும் இருந்திராத உட்கட்டமைப்பு ஒன்று இருந்தது என்பதை உணர்த்தியது.

இதை உணர்ந்த நிலையில், குண்டுத் தாக்குதல்களுக்கு பிறகு நீண்டகாலமாக மக்கள் மத்தியில் ஒரு நெருக்கடிக்குள் வாழ்கிறோம் என்ற எண்ணம் தொடர்ந்து நீடித்தது. கிறிஸ்தவர்கள் மாத்திரமல்ல ஏனைய சமூகத்தவர்கள் மத்தியிலும் அடுத்த இலக்கு தாங்களாக இருக்கக்கூடுமோ என்ற பீதி நிலவியது.

அத்தகைய பயங்கரமான உட்கட்டமைப்பை பெரும்பாலும் கொண்டிருக்கக் கூடியவர்கள் அந்த நேரத்தில் ஐரோப்பாவையும் மத்திய கிழக்கையும் இலக்கு வைத்து குண்டுத்தாக்குத்களை நடத்திக்கொண்டிருந்த ஐ.எஸ். ஐ.எஸ். ( ஈராக் மற்றும் சிரியாவின் இஸ்லாமிய அரசு ) இயக்கத்தவர்களாகவே இருக்கமுடியும் என்று நம்பப்பட்டது. ஆனால், பதற்ற நிலை தணிந்து அரசாங்கம் மாறியதும் அந்த இயக்கம் இலங்கையில் எந்த அக்கறையையும் காடடவுமில்லை. எந்த வடிவிலும் அது மீளத் தோன்றவுமில்லை.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களுக்கு பின்னரான கடந்த நான்கு வருட காலப்பகுதியில் அரசாங்கம் பல்வேறு விசாரணைகளை நடத்தியது.





குண்டுத் தாக்குதல்களுக்கு பிறகு விரைவாக மே 22, 2019 சபாநாயகர் நியமித்த பாராளுமன்ற தெரிவுக்குழு 23 அக்டோபர் 2019 அதன் அறிக்கையைக் கையளித்தது. அந்த குழுவில் பல்வேறு அரசியல் கட்சிகள் அங்கம் வகித்த நிலையில் அதனால் கருத்தொருமிப்புடனான முடிவுகளுக்கு வருவது சாத்தியமில்லாமல் போய்விட்டது. இது எதிர்பார்த்திருக்கக்கூடியதே.

அதை தொடர்ந்து 22 செப்டெம்பர் 2019 ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைமையில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமித்தார். அது சிரமம் மிகுந்த விசாரணைகளுக்கு பிறகு பல தொகுதிகள் கொண்ட அறிக்கையை பெப்ரவரி 1, 2021 கையளித்தது. அந்த அறிக்கையை அரசாங்கம் பொதுமக்களுக்கு வெளியிடாதது மாத்திரமல்ல, முழு அறிக்கையையும் கோரிய திருச்சபைகளுக்கு கூட கொடுக்கவில்லை.

அதேவேளை அடுத்து முன்னெடுக்கப்பட்ட பொலிஸ் விசாரணைகள் மோசமான திருப்பத்தை எடுத்தது. உயர் மட்ட பொலிஸ் விசாரணையாளர்களில் சிலர் தாங்கள் சட்டமீறல்களைச் செய்ததாக குற்றஞ்சாட்டப்படடனர். அவர்களில் ஒருவர் தான் கொடுமைப்படுத்தப்படக்கூடும் என்ற பயத்தில் நாட்டைவிட்டு தம்பியோடினார். இந்த விசாரணையாளரின் குரலை சனல் 4 விவரணக் காணொலியில் கேட்கக்கூடியதாக இருந்தது.

இலங்கையில் உண்மையைத் தேடுதலும் பொறுப்புக் கூறலும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களுக்கு அப்பால் செல்கிறது.

1971 ஆம் ஆண்டுக்கு பிறகு இலங்கை பாரிய வன்முறைக் காலப்பகுதிகளுக்கு முகங்கொடுத்தது. அவற்றின் உண்மையும் பொறப்புக்கூறலும் இன்னமும் மறைந்தே கிடக்கிறது.1988ஃ 1989 கிளர்ச்சிக் காலப்பகுதியில் இறந்தவர்கள் அல்லது காணாமல் போனவர்களின் எண்ணிக்கை இதுவரை தெரியாது. அது ஆயிரக்கணக்கில் இருக்கலாம்.



கலாநிதி ஜெகான் பெரேரா

அந்த கிளர்ச்சிகளில் உயிர்தப்பி வாழ்பவர்களும் அவர்களின் குடும்பங்களும் இன்னமும் அந்த நினைவுகளுடனேயே வாழ்கிறார்கள். உண்மையும் நீதியும் வெளிக்கிளம்பும் என்ற நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் நான்கு தசாப்தங்கள் கடந்தும் எதையும் காணமுடியவில்லை.

2009 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த உள்நாட்டுப்போரில் இதை விடவும் கூடுதல் எண்ணிக்கையானவர்கள் மரணமடைந்தார்கள், காணாமல்போனார்கள். அவர்களின் குடும்பங்களும் அந்த்நினைவுகளுடன் வாழ்வதுடன் உண்மை கண்டறியப்பட்டு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் கொண்டிருக்கிறார்கள்.

### நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புதல்

2009 ஆம் ஆண்டில் போர் முடிவுக்கு வந்தது முதல் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கேள்விக்குட் படுத்தப்படும் சில நாடுகளில் இலங்கையும் ஒன்றாக இருந்துவருகிறது. 2015 தொடக்கம் 2018 வரை ஒரு குறுகிய காலப்பகுதிக்கு ஐக்கிய நாடுகள் தீர்மானங்களுடன் ஒத்துழைப்பதற்கு இலங்கை இணங்கியதுடன் நாட்டுக்கு அனுகூலமான அறிவிப்புகளையும் காணக்கூடியதாக இருந்தது.

ஆனால் மீண்டும் இலங்கை பாதகமான நிலைமைக்கு திரும்பியிருக்கிறது போன்று தெரிகிறது.

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் கடந்த வாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயல்ஸ்தானிகர் இலங்கை எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளில் மிகவும் அடிப்படையானது பொறுப்புக்கூறல் இன்மையாகும் என்று குறிப்பிட்டார்.

போர்க் காலப்பகுதியின் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றங்களுக்கு மேலதிகமாக விசாரிக்கப்படவேண்டிய மக்களுக்கு எதிரான விவகாரங்களின் பட்டியலில் ஐக்கிய நாடுகள் முறைமை இப்போது ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களையும் திடீர்ப் பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்களையும் சேர்த்திருக்கிறது. இவை உண்மை மற்றும் பொறுப்புக் கூறலுக்கு உட்படுத்தப்படவேண்டியவையாகின்றன.

நம்பிக்கையும் நல்லெண்ணமும் இன்மையே இலங்கையில் இன்று ஆட்சிமுறையின் பிரதான பிரச்சினையாகும். இதை மீளக்கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும். மக்களும் அரசாங்கத்தை நம்பவில்லை, அரசாங்கமும் மக்களை நம்பவில்லை என்றே தோன்றுகிறது.

நம்பிக்கை ஏற்படவேண்டுமானால் வெளிப்படைத் தன்மையும் உண்மையும் இருக்கவேண்டியது அவசியமாகும். உண்மையைக் கண்டறிவதற்கு அரசாங்கம் முன்னெடுத்த விசாரணைகளின் தொடர்ச்சியான தோல்விகளின் விளைவாக அரசாஙகத்தில் நம்பிக்கையில்லாமல் போய்விடடது. அதனால் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படக்கூடிய எந்தவொரு விசாரணையையும் மக்கள் அக்கறையுடன் நோக்கப்போவதில்லை. அதை காலத்தை கடத்தும் ஒரு செயலாகவே அவர்கள் கருதுவார்கள்.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைமையில் விசாரணைக்குழு ஒன்றை நியமித்திருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் சூத்திரதாரி ஒருவர் இருந்ததாக முன்னாள் சட்டமா அதிபரினால் கூறப்பட்ட குற்றச்சாட்டை விசாரிக்க பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிப்பதற்கான தனது உத்தேசத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

இந்த இரு விசாரணைகள் நிறைவுபெற்றதும் அவற்றின் அறிக்கைகள் அடுத்து முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இறுதித் தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

(16ம் பக்கம் பார்க்க)

# மீண்டும் ராஜபக்ஷக்களின் யுகத்தை ஏற்படுத்த சிங்கள காடையர் முயற்சி

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன்

முல்லைத்தீவு, செப். 20

"தியாகி திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய மக்கள் அஞ்சலி ஊர்தியையும் ஊர்தியோடு பயணித்தவர்களையும் தேசிய கொடி தாங்கிய சிங்கள காடையர்களால் மிருகத்தனமாக கொலை வெறியோடு தாக்கப்பட்டமையை வன்மையாக கண்டிக்கின்றேன்" என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் தனது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரின் அறிக்கையில், "தமிழர்களுக்கு எதிரான பயங்கரவாத வன்முறை அரசியலை இனவாதிகள் தொடர்ந்தும் செய்ய விரும்புகின்றார்கள் என்பதையே தாக்குதல் வெளிப்படுத்துவதோடு, மீண்டும் ராஜபக்ஷ யுகத்தை கொண்டுவரவே இந்த சிங்கள காடையர்கள் முயல்கின்றார்கள் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. இந்நாட்டில் தமிழர்கள் அகிம்சை வழியிலும் வாழ முடியாது என்பதை சர்வதேசமும் உணர்ந்திருக்கும் என நம்புகின்றோம்.

தாக்குதல் தொடர்பில் காட்சிகளின் பதிவு சமூக வலைதளங்களில் போதுமான சாட்சியாக இருக்கும் போது ஐவர் மட்டும் கைது செய்யப்பட்டது ஏன்? திலீபன் மக்கள் அஞ்சலி ஊர்தி பயணத்தை ஆரம்பத்திலிருந்து அரச புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாக முன்னும் பின்னும் பயணித்ததை நாம் அறிவோம். எல்லா பொலிஸ் நிலையங்களுக்கும் இது தெரியும்.

அவ்வாறு இருக்கையில் எந்தெந்த இடங்களில் தாக்குதல் நடத்தப்படும் என பொலிஸார் அறிந்திருந்தும் அதை தடுக்க முன் ஏற்பாடு செய்யாதது ஏன்? தாக்குதல் நடத்தியவர்களை பொலிஸார் தமக்கே உரிய பாணியில் தடுக்க முயற்சிக்காதது ஏன்?

இந்த தாக்குதல் திட்டமிட்ட அரச பயங்கரவாதத்தின் கோரம் என்பதே உண்மை. தமிழர்களுக்கு எதிராக இனவாத நோக்கில் வரலாற்றில் வன்முறையினை கட்டவிழ்த்து விட்டவர்கள், தாக்குதல் நடத்தியவர்கள் நீதியின் முன் நிறுத்தி தண்டனை பெறுவார்கள் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை. அவ்வாறே நீதிமன்ற குற்றவாளிகளாக அடையாளம் கண்டாலும் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் வெளியில் வந்து விடுவார்கள். இது கடந்த கால எமது அனுபவம்.

திலீபன் உணர்வாளர்கள் மீது நடத்தப்பட்ட கொடூர கொலை வெறி தாக்குதல் தமிழ் மக்களின் உள்ளத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. தாக்குதல் நடத்திய சிங்கள காடையர்கள் மீதும் அரசின் மீதும் அரசின் பாதுகாப்பு கட்டமைப்பின் மீதும் கோபம் கொண்டுள்ளனர்.

எனவே தமிழ் அரசியல் தலைவர்கள் யாருக்காகவும் அரசியல் செய்யாது தமிழர் தேசத்திற்காக, மக்கள் அரசியல் செய்ய திலீபன் நினைவேந்தல் வாரத்தில் உறுதி கொள்வோம். அதனை நாட்டின் பேரினவாத அரசுக்கும், சர்வதேசத்திற்கும் வெளிப்படுத்துவோம் என தெரிவித்துள்ளார்.

(ஐ)

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள்....

(15ம் பக்கத் தொடர்ச்சி)

ஐயகோ, ஜனாதிபதியின் இந்த முன்மொழிவுகள் ஏற்கெனவே வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படாத விசாரணைக் குழுக்களையும் அவற்றின் அறிக்கைகளையும் ஒத்தவையாகவே தெரிகிறது.

முன்னைய உள்நாட்டு விசாரணைகளின் ஊடாக குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் இருந்திருக்கக்கூடியவர்கள் அடையாளம் காணப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு அவர்களை பொறுப்புக்கூறவைக்கத் தவறியமையே சர்வதேச விசாரணை வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ச்சியாக எழுவதற்கு வழிவகுத்தது. உண்மையையும் நீதியையும் பெறுவதற்கு சர்வதேச விசாரணையை பிரதானமாக கத்தோலிக்க திருச்சபையும் பாதிக்கப்பட்ட குடும்பங்களும் கோரிநிற்கின்றன.

சனல் 4 விவரணக் காணொளி வெளியான பிறகு சர்வதேச ஆதரவுடனான விசாரணைக்கு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவும் கோரிக்கை விடுத்திருக்கி றார். உண்மை வெளிவருவதற்கு எதிராக வலிமையான சக்திகள் அணிதிரண்டு நிற்பதற்கு மத்தியில், ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்கள் உண்மையில் பயங்கரவாதிகளின் செயலா அல்லது சிலரை அதிகாரத்துக்கு கொண்டுவருவதற்கு தீடடப்பட்ட சதித்திட்டம் ஒன்றின் விளைவா என்பதை மக்கள் தெரிந்துகொள்ளக்கூடியதாக சந்தேகங்களைத் தெளிவுபடுத்த நம்பகமான விசாரணை தேவை என்று துணிச்சலுடன் அவர் கூறியிருக்கிறார்.

அறகலய போராட்ட இயக்கத்தினால் பதவியில் இருந்து விரட்டப்பட்ட ஜனாதிபதிக்கு பதிலாக பதவிக்கு வந்த ஜனாதிபதியும் அதே பாதையைத் தொடருவது ஒரு முரண்நகையாகும் என்றும் பிரேமதாச கூறியிருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரும் பாதிக்கப்பட்டவர்களினதும் கத்தோலிக்கத் திருச்சபை போன்ற அவர்களின் பிரதிநிதிகளினதும் துடிப்பான பங்கேற்புடன் சர்வதேச ஆதரவுடன் சம்பந்தப்பட்ட சகல தரப்புகளையும் உள்ளடக்கிய சுயாதீனமானதும் வெளிப்படையானதுமான அகல்விரிவான விசாரணையொன்றை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார். ஐக்கிய நாடுகளின் இந்த கோரிக்கை உள்நாட்டுப் போரின்போது இறந்துபோன அல்லது காணாமல் போன ஆயிரக்கணக்கானவர்களின் கதி பற்றிய உண்மையைக் கண்டறிய தமிழ் மக்கள் கோருகின்ற விசாரணையை ஒத்ததாக இருக்கிறது.

இந்த பிரச்சினைகளில் சம்பந்தப்பட்டவர்கள் உண்மை வெளிவருவதை விரும்பவில்லை என்ற அறிவுபூர்வமான முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது.

சர்வதேச பங்கேற்புடனான அத்தகைய விசாரணை ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் மாத்திரமல்ல உள்நாட்டுப்போர் மற்றும் பொருளாதார வீழ்ச்சி தொடர்பிலும் பொறுப்புக்கூறலையும் நீதியையும் உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் மெய்யான நோக்கங்களில் இலங்கை மக்களும் பாதிக்கப்பட்டவர்களும் சர்வதேச சமூகமும் நம்பிக்கை வைக்க உதவும்.

அத்தகைய விசாரணை ஒரு மேலதிக பயனாக, சர்வதேச உதவி உச்சபட்சமாக தேவைப்படுகின்ற ஒரு நேரத்தில் நாட்டுக்கு உதவமுடியும். ●

